# இந்திராவின் அவசரசட்டம்: நிறுத்திவைக்க சுப்ரீம்கோர்ட் உத்தரவு

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 161
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் ஆடி 8 ஜ: அவ் 7 புதன்கிழமை [23-7-69]

புதுடில்லி, ஜுலை 22

வங்கிகளைத் தேச உடமையாக்குவதற்காக இந்திய அரசு பிறப்பித்த அவசரச்சட்டத்தை அமுல் செய்வதை நிறுத்திவைக்கும்படி இந்திய சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டிருக்கின்றது

காங்கிரஸ்கட்சிக் காரியக் கமிட்டி பெங்களூரில் கூடி அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பேரில் இந்தியாவிலுள்ள பதினான்கு வர்த்தக வங்கிகளைத் தேசிய உடமையாக்குவதற்கான அவசரச் சட்டமொன்றை இந்திய அரசாங்கம் பிறப்பித்தது.

இந்தச் சட்டம் செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கும்படி கோரி, சுப்ரீம் கோர்ட்டில் இரு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களை விசாரிக்க ஆரம்பித்த சுப்ரீம்கோர்ட் ஏற்கனவேயுள்ள சட்டங்களின்படி இந்த அவசரச் சட்டத்தை நிறுத்திவைக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தது.

வங்கிகளில் உள்ள பழைய அதிகாரிகளை விலக்குவதையும் நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மாவை ஆலயத்தில்

## பூட்டிய கதவுகளின் பின் திருவிழா நடைபெறும்

மாவிட்டபுரம், செவ்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலய உற்சவம் மீண்டும் பூட்டிய கதவுகளுக்குள்ளேயே நடைபெற்றுவருகிறது.

கோயிலுக்கு வரும் எவரும் வெளியில் நின்றே வணங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கோயில் குருக்களும் கோயில் பணியாளர்களும் உள்ளே செல்வதற்கு அனுமதிவழங்கப்பட்டிருக்கிறது. ஆனல் இவர்களின் பெயர்கள் பொலிசாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. சுவாமி வெளிவீதி வருவதற்கு முன்பாக கோயில் கதவுகள் திறக்கப்படுவதற்குச் சற்று நேரத்துக்கு முன்னர் உபயகாரர்கள் உள்ளே செல்லவும் சுவாமி வெளிவீதி சுற்றித் திரும்பிச் சென்றதும் கதவுகள் திறந்து மூடப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் பொலிசாரிடம் கொடுக்கப்படவேண்டும்.

கோயிலைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட தொகையினர் உள்ளே செல்வதற்குச் சட்டம் இடம் கொடுப்பதாகவும் மற்றும்படி எல்லோரும் வெளியே நின்று வணங்கும் பொழுது ஒரு சிலரை உள்ளே செலவதற்கு நடவடிக்கை யெடுக்க சட்டத்தில் இடமில்லையென்றும் பொலிஸ் பகுதியினர் தெரிவித்தனர். இதற்கு உதாரணமாக கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலை அவர்கள் சுட்டிக் காட்டுவதுடன் அட்டர்ணி ஜெனரல் தெரிவித்த விளக்கத்தையும் எடுத்துக்காட்டுகின்றனர்.

# பூமியைநோக்கி சரியான பாதையில் அப்பல்லோ-11 திரும்பிவருகிறது

## வீரர்கள் மூவருக்கும் பத்துமணி நேரம் ஓய்வு

ஹுஸ்டன், ஜுலை 22

அப்பல்லோ—11 வீரர்கள் தமது நிலாப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் இப்பொழுது பூமியைநோக்கி விரைந்துகொண்டிருக்கிறார்கள்.

தாய்க்கலமான 'கொலம்பியா'வுடன் 'ஈகிள்' இணைந்து ஆம்ஸ்ரோங்கும், ஆல்டிரினும் தாய்க்கலத்தில் ஏறியபின் 'ஈகிள்' கலத்தைக் கழற்றி விட்டு சந்திரனைச்சுற்ற ஆரம்பித்தார்கள். 'கொலம்பியா' சந்திரனின் இருள் பகுதிக்குப்போனதும் அவர்கள் தமது பிரதான ரொக்கட்டை வெடிக்கச் செய்தனர். சிறிதுநேரம் பூமிக்கு எதுவித தகவலும் இருக்கவில்லை. ஹுஸ்டன்கட்டுப்பாட்டு நிலையத்தினர் மிகபரபரப்புடன் கவனித்துக்கொண்டிருந்தனர்.. சற்று நேரத்தில்அதிலிருந்து சமிக்ஞைகள் வருவதாக அறிவித்தனர்.

பிரதான ரொக்கட் சரியாக வெடித்ததால் கொலம்பியா சந்திரமண்டலத்திலிருந்து பூமியை நோக்கி சரி

வடபகுதி அசைஸ் விசாரணை

## மல்லாவி கொலைவழக்கு விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

மல்லாவி கொலை வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மல்லாவியில் 1968-ம் வருடம் பெப்ரவரி 2-ம் திகதி வைத்திலிங்கம் விஜயரத்தினம், செல்லன் ராஜரத்தினம், செல்லன் சதாசிவம், செல்லத்துரை துரைசிங்கம், ராமநாதன் சண்முகம், சண்முகம் ஜெயபாலன் ஆகிய 6 பேரும் சட்ட விரோதமாகக் கூடியதாகவும் வேலுப்பிள்ளை மூத்ததம்பியைக்கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

பெரேரா ஆஜரானுர். விசாரணையைப் பார்ப்பதற்காக உள்ளேயும் வெளியேயும் மக்கள் திரண்டிருந்தனர். கல்லூரி மாணவ மாணவிகளும் வந்திருந்தனர்.

டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி, செல்லையா, நாகம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## அபராதம்

அளவெட்டி, செவ்.

கீரிமலை வீதியால் இரவு காவலுக்காகச் சென்று கொண்டிருந்த காங்கேசன் துறைப்பொலிஸ் பகுதிசப் இன்ஸ்பெக்டர் திரு ரஞ்சன் பெரேரா, கொல்லங்கலட்டி

## 18 வழக்குகள்

ஜனதிபதி தேர்தல்

## எதிர்க்கட்சி தலைவர்களுடன் கருணாநிதி ஆலோசனை

புதுடில்லி, ஜுலை 24

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி ஜனதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் ஒரு வேட்பாளரை ஒருமனதாக ஆதரிப்பது பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்.

இன்று அவர் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரோடு பேசினர். ஜனதிபதி தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகிறீர்கள் எவர் பெயராவது இன்றைய பேச்சு வார்த்தைகளின் போது அடிபட்டதா வென்று கேட்டதற்கு அவர் நேரடியாக பதில் கூறவில்லை.

இன்று அவர் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர்களை சந்திக்க விருக்கிறார்.

கிய தொடர்பு கொண்டவர் என்பதாலும் சமீப காலத்தில் நாடு பூராவிலும் அவருக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டிருப்பதாலும் அவர் வெற்றி பெறுவது சாத்தியம் என்று கருதப்படுகின்றது.

## பனையிலிருந்து விழுந்துமரணம்

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் மேற்கு திக்கம் என்ற இடத்தைச் சேர்ந்த வேலன் ஆறுமுகம் (வயது 38) என்னும் சீவல் தொழிலாளி பனை மரத்திலிருந்து விழுந்து பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு மரணமானுர்.

வைத்திய அதிகாரி டாக்

## முகம்தலி பிரேரணை

கோட்டை, புதன்

மூதூர் எம். பி திரு. எம். ஈ. எச். முகமது அலி உள்நாட்டு வைத்தியர்கள் சம்பந்தமான பின்வரும் பிரேரணையை மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு வைத்தியத் தொழில் புரிவோர் -காப்புறுதி செய் கொள்பவர்களை வைத்தியப்பரிசோதனை செய்வதற்குவைத்தியத் தொழில் புரியும் ஏனையவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதே வசதிகள் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு வைத்தியத் தொழில் புரிபவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமெனவும் குறைந்தது 5000 ரூபா வரையில் காப்புறுதிசெய்து கொள்பவர்களைப் பரிசோதனை செய்வதற்கு உள்நாட்டு வைத்தியத்தொழில் புரிபவர்களுக்கு வசதிகள் அளிக்கப்பட வேண்டுமெனவும் இச்சபை கருதுகிறது.

## 5,30 ,000 ரூபாவுக்கு விதைக் கிழங்கு

கோட்டை, செவ்வாய்

இந்த வருடத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 5, 307, 000 பெறுமதியான விதை உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுவரெலியா, ஊவா பகு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராமநாதன் சண்முகம், சண்முகம் ஜெயபாலன் ஆகிய 6 பேரும் சட்ட விரோதமாகக் கூடியதாகவும் வேலுப்பிள்ளை மூத்ததம்பியைக்கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

எதிரிகள். 6 பேர் சார்பிலும் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்கியூசி அட்வக்கேட் திரு. ஏ. அரசுவால்டன், அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன் அட்வக்கேட் திரு. எஸ். ஜெகநாதன் ஆகியோரின் உதவியுடனும் புறக்டர்களான திரு. என். நடராசா, திரு. வி. செல்லத்தம்பி. திரு. பரமானந்தன் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானுர்.

முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் திரு. பிரியாந்தே

அளவெட்டி, செவ்.

கீரிமலை வீதியால் இரவு காவலுக்காகச் சென்று கொண்டிருந்த காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதிசப் இன்ஸ்பெக்டர் திரு ரஞ்சன் பெரேரா, கொல்லங்கலட்டியைச்சேர்ந்த சின்னையா கணேசு என்பவர்சைக்கிளில் ஒருசாக்குக்கொண்டுசென்ற போது சந்தேகத்தின் பேரில் அவரை மறித்துபரிசோதனை செய்த போது அவரிடம் இருந்த 6 போத்தல் சாராயத்தை கைப்பற்றினுர்.

இவரை காங்கேசன் துறைப்பொலிசார் மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமிமுன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதிபதி 25ரூபா பராதம் விதித்ததுடன்சாராயத்தையும் பறிமுதல் செய்தார்.

# சந்திரனும் பூமியும் நிகழ்த்திய சம்பாஷணை

ஹவுஸ்டன், ஜுலை 21

சந்திரனில் காலடி எடுத்து வைத்த சில நிமிடங்களில் சந்திரனில் ஆம்ஸ்ரோங்கும் ஆல்டிரினும் அங்கு நின்றவாறு பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்தினருக்கு கொடுத்த சில தகவல்கள்:

ஆம்ஸ்ரோங்: இப்போது நிலாவில் போதிய அளவு வெளிச்சம் இருக்கிறது.

ஆல்ட்ரின்: கற்களை கிண்டி எடுப்பதில் கஷ்டமாயிருக்கிறது.

ஆம்ஸ்: ஆம். சுவாரசியமாகயிருக்கும் கற்பாறைகள் கடினமற்றவையாக அழகாகயிருக்கின்றன.

ஆல்ட்: நான் மண்ணை தோண்டிய இடம் 6 அங்குலம் தொடக்கம் 8 அங்குலம் வரையுள்ளது. அதனுள் தடியை செலுத்த முடிகிறது. நிலம் மிகவும் மென்மையாக வழுவழுப்பாக இருக்கிறது.

ஆம்ஸ்;- தடியை இன்னும் உள்ளே தள்ள முடியும். ஆனுல் குனிந்து தள்ளுவதற்கு எனது உடைகள் தடையாகவிருக்கிறது.

ஆல்ட்: தரை தூளாகயிருக்கிறது. சில கற்கள் உண்மையான தூள்களின் கட்டிகளாக இருக்கின்றன.

நீங்கள் பயிற்சிநிலையத்தில் உருவாக்கிய சந்திரனை விட இந்தச் சந்திரன் மிகவும் அழகாகவிருக்கிறது என்றும் கூறினுர்.

சந்திரனை வலம் வந்துகொண்டு தாய்க்கப்பலிலிருந்த கொலின்ஸ சந்திரனில் நின்றுகொண்டிருந்த ஆம்ஸ்ரோங்கிடம் 'வரலாறு அமைத்துவிட்டீர்கள்' என்று மிகவும்பூரிப்புடனும்சென்னுர்.

ஆம்ஸ்: ஆம். இறங்கும் இடம் தேர்ந்தெடுப்பதில் கஸ்டமிருக்கவில்லை. நாம் திரும்புவதற்கு உங்கள் கப்பலை தயாராக வைத்துக கொள்ளுங்கள். எங்கும் இங்கு சுற்றிவர மலைகளும் பாறைகளும் காணப்படுகின்றன.

இப்படி இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருந்த போது தாய்க்கப்பல் எதிர்ப்புறத்துக்கு சென்றுவிட்டது. உடனே கொலின்ஸ் நிலக்கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு சந்திரனில் நடப்பதை தாம் பார்க்க முடியாதிருப்பதாக கவலை தெரிவித்தார்.

ஆம்ஸ்: சந்திரனை விடப் பூமி பெரிதாக பிரகாசமாக அழகாக இருக்கிறது.

ஆல்ட்: எனது உடையில் வெப்ப தாக்குதல் ஏற்படவில்லை. நாம் இறங்கி நிற்கும் பகுதி மற்றைய பகுதிகளை விட கடுமையாகயிருக்கிறது. மண்ணின் கீழ்ப்பக்கம் கடுமையான சாம்பல் நிறம் சேர்ந்த கொக்கோ நிறமாகவுள்ளது.

...புடன் கவனித்துக்கொண்டிருந்தனர்.. சிறுநேரத்... சமிக்ஞைகள் வருவதாக அறிவித்தனர்.

# 18 வழக்குகள் விசாரணை செய்யப்படும்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இரண்டாவது பருவகால விசாரணை நேற்றுக்காலை 11 மணிக்கு நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெஸ்டர் முன்னிலையில் ஆரம்பமாகியது.

நீதியரசர் ஆசனத்துக்கு வந்த போது பொலிஸ் அணிவகுப்பு மரியாதை நடைபெற்ற பின் வடபகுதி பிஸ்கால் அதிகாரியான திரு. பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் இப்பருவ காலத்துக்கான வழக்குகளின் பட்டியலை நீதியரசரிடம் கையளித்தார் 18 வழக்குகள் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

மாவட்ட நீதிபதி ஜனுப் ஐ. எம். இஸ்மாயில் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் ஜனுப் ஜமீல், சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராஜா, மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி ஆகியோரும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்.

விசாரணை ஆரம்பமாகுமுன் நீதியரசர் கிறெஸ்டர் தேவாலயத்துக்குச்சென்று வழிபாடுசெய்தார்.

# திருவள்ளுவர் பெருமைபற்றி எம்.பிக்கள் விளக்கம்

சுழிபுரம், செவ்வாய்

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழினம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த இனம் என்பதை திருக்குறள் மூலமாக எமக்கு திரட்டித் தந்தவர் திருவள்ளுவர். திருக்குறள் ஒரு வாழ்வு நூலாகவும்-நீதி நூலாகவும் திகழ்கின்றது. மலிந்த காதல் நூல்களைக் கற்கும் வாலிபர்கள் ஏனே திருவள்ளுவர் கூறும் காதல் கருத்துக்களை புரியாதவராகவிருக்கின்றனர் என்பது தெரியவில்லை? நுனிப்புல் மேயாது ஆழ்ந்த அறிவைப் பெற முயல்வதாலேயே வள்ளுவர் குறளை நன்கு அறியலாம்"

'வட்டுக்கோட்டை தமிழ் சங்கத்தினர் கொண்டாடிய இரண்டாயிரம் ஆண்டு வள்ளுவர் நிறைவு விழாவின் ஆய்வுரை நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. தலைமை வகித்தார். திருமதி பொ. பாக்கியம் வரவேற்புரை நிகழ்த்தினுர். திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில்கூறியதாவது அறிவை வளர்த்தோம் என்று பெருமை பேசும் மேலைத்தேசத்தவர். ஆக்க வழியின்றி அழிவுப் பாதையில் செல்வதையும் மன நோயால் பாதிக்கப்பட்டு அமைதியற்ற வாழ்வு வாழ்வதையும் காண்கின்ருேம். மன அமைதியைக் கொடுக்கவும் அறிவை வளர்க்கவும் உரியநூல் திருக்குறளாகும்'

# கரணவாயில் திருட்டுக்கள் அதிகரிப்பு

உடுப்பிட்டி, செவ்.

மூன்று வருடங்களின் பின்னர் கரணவாய் தெற்கில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. இரு தினங்களுக்கிடையில் மூன்று வீடுகளில் அடுத்தடுத்துத் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிய வருகிறது

கரணவாய் தெற்கு, சோளங்கன் என்னுமிடத்தில் இரத்தினம் என்பவருடைய வீட்டில் நள்ளிரவில் புகுந்த திருடர்கள் பணம், நகைகள், விலையுயர்ந்தசேலைகள் ஆகியவற்றைத் திருடிச் சென்றுவிட்டனராம். களவாடப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ் அடுத்த வளவொன்றில் திறந்தபடி காணப்பட்டதைத் தொடர்ந்துஅடுத்த வளவுப் பெண்மணி விசாரித்ததைத் தொடர்ந்தே இரத்தினம் தனது வீட்டில் திருட்டுப் போய்விட்டதை அறிந்து கொண்டாராம்.

கரணவாய் தெற்கு, குருக்கட்டு என்னுமிடத்தில் மறுநாளிரவு கார்த்திகேசு என்பவருடைய வீட்டில் புகுந்த திருடர் கோஷ்டி பணம், உடுபுடவைகளைக் களவாடிச் சென்றுவிட்டது.

இன்னுமொரு வீட்டில் நடைபெறவிருந்த திருட்டு முயற்சி வீட்டுக்காரர்கள் தக்கசமயத்தில் நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டதால் முறியடிக்கப்பட்டதாம்.

இத்திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாகப் பொலிஸார் தீவிர புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர். அதிகரித்துவரும் திருடர் தொல்லையை ஒழிப்பதற்காகக் கரணவாய் தெற்குக் கிராம சேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தொண்டர்படையை உஷார்படுத்தியுள்ளார். இரவு 10 மணிக்குப் பிறகு இப்பகுதி வீதிகளில் நடமாடுபவர்களையும் வாகனங்களையும் தொண்டர் படையினர் மறித்துப் பரிசோதிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான ரொக்கட் சரியாக வெடித்ததால் கொலம்பியா சந்திரமண்டலத்திலிருந்து பூமியை நோக்கி சரியான கோணத்தில் புறப்பட்டது.

"ரொக்கட் மிக நேர்த்தியாக வெடித்தது" என்று ஆம்ஸ்ரோங் கூறினுர். 'நீங்கள் தாயகம் திரும்பிக் கொண்டிருப்பதுபற்றி அறிந்து மகிழ்ச்சியடைகிருேம்' என்று கீழே இருந்து பதில் கூறப்பட்டது.

சந்திரனைச்சுற்றி 5400 மைல் வேகத்தில் போய்க் கொண்டிருந்த கொலம்பியா, ரொக்கட் வெடிக்கப்பட்டதும் மணிக்கு 9100 மைல்வேகத்தில்கிளம்பியது சந்திரமண்டலத்திலிருந்து3 லட்சத்து 86 ஆயிரம் மைல் பிரயாணத்தை முடித்துக் கொண்டு அப்பலோ வீரர்களான ஆம்ஸ்ரோங், கொலின்ஸ், ஆல்டிரின் ஆகிய மூவரும் அடுத்த வியாழக்கிழமை பசுபிக் சமுத்திரத்தில் வந்து இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பூமியை நோக்கிப் புறப்பட்டுள்ள அப்பலோ வீரர்கள் பத்துமணி நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வார்கள்.

சந்திரமண்டலத்திலிருந்து புறப்படுவதற்கான திட்டத்துக்கு முன்பதாக அவர்கள் புறப்பட்டிருக்கிறுர்கள்.

சந்திரகலத்திலிருந்து ஆம்ஸ்ரோங்கும் ஆல்ட்ரினும் தாய்க்கப்பலில் ஏறிய போது சிறிது சங்கடம் ஏற்பட்டதாகவும் ஆனுல் அது என்னவென்று அறிவிக்கப்படவில்லையென்றும் கூறப்பட்டது,

அடிபட்டதா வென்று கேட்டதற்கு அவர் நேரடியாக பதில் கூறவில்லை.

இன்று அவர் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர்களை சந்திக்க விருக்கிருர்.

எதிர்க் கட்சிகள் சார்பில் ஒரு வேட்பாளரை ஒருமனதாக ஆதரிக்க வேண்டும் என்று அவர் கருதுவதாகத் தெரிகின்றது.

தி. மு. க. வைப் பொறுத்தவரையில் இப்போதைய நிலையில் புதிய வேட்பாளர் ஒருவரை வேட்பாளராகப் போடுவதைவிட திரு. கிரியையே ஆதரிப்பது பொருத்தமாய் இருக்குமென்று கருதப்படுவதாகத் தெரிகின்றது. திரு. கிரியை ஆதரிப்பதனுல் சாதகமான நிலை உருவாகலாம் என்று தி. மு. க. மேலிடம் நம்புவதாகவும் கூறப்படுகின்றது,

திரு. கிரிக்கு ஏற்கனவே கம்யூனிஸ்டுகள் சமிக்ஞை காட்டியிருக்கிருர்கள். காங்கிரஸ் காரர்களில் சிலருமே அவரை ஆதரிக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது. மேலும் திரு. கிரி உழைக்கும் மக்களுடன் நெருங்

# ஜேம்ஸ் புனித திருநாள்

ஊர்காவற்றுறை, செவ்

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ்தேவாலயவருடாந்த உற்சவம் இம்மாதம் 25ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. காலையில் விசேட ஆராதனைகளும் மாலையில் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்.

# 'அடிக்கடி சீர்குலைகிறது'

நெடுந்தீவு, செவ்வாய்

குறிகாட்டுவான் நெடுந்தீவுப்படகுச் சேவை அடிக்கடி சீர்குலைந்து வருவதால் இப்பகுதிப்பிரயாணிகள் பெரும் அவதிப்படுவதாக பொதுமராமத்து அமைச்சருக்கு நெடுந்தீவு சமூகமுன்னேற்றச் சங்கத்தினா. அவசரதந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையில் மிகவும் பிற்போக்கான நிலையிலுள்ள நெடுந்தீவின் முக்கியதேவையான இயந்திரப்படகுச் சேவையைத் திருத்தியமைப்பதோடு மேலும் நல்லபடகுகளைச் சேவையில் ஈடுபடுத்துமாறு இவர்கள் அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

என்னும் சீவல் தொழிலாளி பனை மரத்திலிருந்து விழுந்து பருத்தித்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

வைத்திய அதிகாரி டாக்டர் திரு. எஸ். கதிர்காமத்தம்பி, இறந்தவரின் மனைவி நற்குணம் ஆகியோர் சாட்சியமளித்த பின் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் தற்செயலாகஏற்பட்ட மரணம்எனத் தீர்ப்பளித்தார்.

# குருபூசை

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு விவேகானந்த சபையார் இன்று சுந்தரமூர்த்திநாயனுர் குருபூசை கொண்டாடுகின்றனர். சபை மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. சு. சிவசிதம்பரம் தலைமை வகிப்பார். திருப்பூங்குடி வி. க. ஆறுமுகத்தின் கதாப்பிரசங்கமும் விழாவில் இடம் பெறும்.

# டெலிவிஷனில் 60 கோடி மக்கள் பார்த்தனர்

ஜெனீவா, ஜுலை 22

உலக சனத்தொகையின் ஐந்தில் ஒரு பகுதியினர் அதாவது 60 கோடி மக்கள் சந்திரனில் மனிதன் முதல் அடி எடுத்து வைத்ததை டெலிவிஷன் மூலம் கண்டு களித்தனர் என ஐரோப்பிய ஒலிபரப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிகமான கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட 49 நாடுகள் சந்திரனிலிருந்து படங்களைப் பெற்றன.

ரூபா 5, 307, 000 பெறுமதியான விதை உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுவரெலியா, ஊவா பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு ஏற்கனவே விதை கிழங்குகளை விநியோகிக்க விவசாய இலாகா ஆரம்பித்துள்ளது. இப்பருவச் செய்கையினுல்ஆகஸ்ட்செப்டெம்பர் மாதங்களில் உருளைக் கிழங்கு விலை குறையலாம் என நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணம், பதுளை, நுவரெலியா பகுதிகளில் 6 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில்இவ்வருடம்உருளைக் கிழங்கு பயிரிடப்படுகிறது எனவும் இதனுல் இவ்வருடம் 22000 தொன் கிழங்கு சாகுபடி செய்யலாம் என விவசாய இலாகா தேரிவித்துள்ளது. சென்ற வருடம் 1050 ஏக்கரில் 8,650 தொன் கிழங்கு பெறப்பட்டது.

சட்டக்கல்லூரி

# தமிழ் மன்ற உறுப்பினர்

வெள்ளவத்தை, செவ்.

இலங்கை சட்டக்கல்லூரி தமிழ் மன்றத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. இ. ஆ. ஜெகதீசன், துணைத்தலைவர்: திரு. அ. டானியல் செகசோதி, பொதுச்செயலாளர்: திரு. தம்பிப்பிள்ளை யோகானந்தர், துணைச்செயலாளர் திரு. இ கமலநாதன், பொருளாளர் திரு. சொ. சண்முகலிங்கம், இதழாசிரியர்: திரு. சி. மு. சண்முகநாதன், அலுவலகப்பற்றற்ற உறுப்பினர்: திரு. மு. சபாநாதன்.

# தலவாக்கொல்லை மாவட்ட எழுத்தாளர் மன்றம்

தலவாக்கொல்லை, செவ்

தலவாக்கொல்லை விவேகானந்த வித்தியாலயத்தில் திரு. எம். பி. துரைசாமி. தலைமையில் நடைபெற்ற தலைவாக்கொல்லை மாவட்ட எழுத்தாளர் மன்ற அங்குராப்பணகூட்டத்தில் மன்றக் கூட்டத்தை மாதம் ஒரு முறை நடத்த வேண்டும் என்றும், எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காகவும், புதிய எழுத்தாளர்களை தோற்றுவிப்பதற்காகவும் மன்ற சார்பில் கதை, கட்டுரை, கவிதை போன்ற போட்டிகளை நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எம்பி. துரைசாமி செயலாளர்: செல்வி. அ. பார்வதி. பொருளாளர்; என் இராமஜெயம்.

செயற்குழுவினர்: வி. ஜெ அலெக்சாண்டர். இல. நாகலிங்கம். ரெங்கசாமி. எம். நாகலிங்கம். மல்லிகை சி. குமார். செல்வி க. இலட்சுமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடு

1-ம் திகதி தொடக்கம் புதிதாகக் கட்டிய வீடு சகல வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும். விபரங்களுக்கு ஐ. சின்னையா, 91, உடையார் அவேனு, ஐயனர் கோவிலடி, வண்ணர் பண்ணை. 1254

### விற்பனைக்கு

கார்

நல்ல நிலைமையிலுள்ள ஸி. எல். தொடர் இலக்க வைக்சோல்-12 கார் விற்பனைக்கு இருக்கிறது. 'வின்ஸ் லோஸ்' மின்சார நிலைய வீதி என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 1058


**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
**குழந்தைக்காக**

வல்வெட்டித்துறை
**ரஞ்சனு தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**காதல் பறவை**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
**நீலமலைத் திருடன்**
(புதிய கொப்பி)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Jane Fonda, Lce Marvin
in
CAT BALLOU

Next attraction
WATER HOLE No. 3

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Dana Andrews
in
CRACK IN THE WORLD

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

**ஜெய்சங்கர்**
**விஜயலக்ஷ்மி**
நடித்த


## கேள்வி விளம்பரம்

எழுவைதீவுக் கிராம சபைத் தலைவரால் 1969-ம் ஆண்டு ஜுலை மாதம் 31-ந் திகதி (31-7-69) காலை 11-00 மணிவரை கடற்கரை வீதி, இரு தொட்டிகள் கட்டுதல் ஆகிய வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள், பத்திரப்பணமாக ரூபா 10-ம், கேள்விப் பிணைப்பணமாக ரூ. 100/-ம் செலுத்தியதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரங்களை கிராம சபை அலுவலகத்திலும், உ. ஆ. உ. ஆணையாளர், (யாழ்ப்பாணம்) அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) வி. சிவசம்பு,
தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு, 19-7-69

1665

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வீணை, 7-35 பேச்சு, 7-45 சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இடைவேளை இசை, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## கோப்பாய் வட்டார பாடசாலைகள் மரதன் அஞ்சல் போட்டி

உடும்பராய், புதன்

கல்விநூற்றாண்டுவிழாவையொட்டி கோப்பாய் வட்டாரப்பாடசாலைகளுக்கிடையே மரதன் அஞ்சலோட்டப்போட்டி இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன்மேற்கொண்டுள்ளார்

இன்று காலை 7 மணியளவில் இடைக்காடு இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சி நாளை மறுதினம் பிற்பகல் கோப்பாய் கந்தவேள் பாடசாலையில் முடிவுறும்.

இப்போட்டியில் கோப்பாய் வட்டாரத்தைச் சேர்ந்த 256 பாடசாலைகள் பங்குகொள்கின்றன.

மூன்றுநாள் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றும் பாடசாலைகளின் இடங்கள் வருமாறு:-

23-ம் திகதி: இடைக்காடு வளலாய், கதிரிப்பாய், அச்சுவேலி, பத்தைமேனி, ஒட்டகப்புலம், வசாவிளான், புன்னலைக்கட்டுவன், ஈவினை, குட்டியப்புலம், நவக்கிரி, தோப்பு

24-ந்திகதி: ஆவரங்கால், புத்தூகலட்டி, வாதரவத்தை புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, அச்செழு, பூதர்மடம் கோப்பாய்.

25-ந்திகதி: உம்பராய், ஊரெழு கோப்பாய், இருபாலை.

## ஆறுவது சைவ மகாநாடு

கைதடி, செவ்வாய்

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் ஆறுவது சைவ மாநாடு அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது.

சைவ இலக்கிய மாநாடென வகுத்து நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் மாநாட்டுப் பரிசுப்போட்டிகளாக சமய நாடகப் போட்டி, நடனப்போட்டி, பேச்சுத்திறனய்வுப்போட்டி திருவைந்தெழுத்துப் சோட்டி, மௌனவிரதப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

## வள்ளுவர் இல்லம் சாம்பியன்

அல்லைப்பிட்டி, செவ்.

வேலணை மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் வள்ளுவர் இல்லம் இவ்வருடசாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. இளங்கோ இல்லமும் பாரதி இல்லமும், கம்பன் இல்லமும் முறையே இரண்டாம், மூன்றும், நான்காம் இடங்களைப் பெற்றன.

## பேச்சுப்போட்டியில் முதலிடம்

திருகோணமலை, செவ்.

திருமலையைச் சேர்ந்த திரு சின்னையா கமலசபேசன்என்னும் சட்டக் கல்லூரி மாணவர் இலங்கை சட்டக் கல்லூரிதமிழ் மன்றத்தின் பேச்சுப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றார். திரு. ரி நடராசாவும் பிள்ளைகளும் வழங்கிய சேர். வைத்திலிங்கம் துரைசாமி ஞாபகார்த்தப் பதக்கமும் அம்மையார் துரைசாமி ஞாபகார்த்தப் பதக்கமும் இவருக்குப் பரிசிலாக வழங்கப் பட்டது.

## சுந்தரர் விழா

கிளிநொச்சி, செவ்

குமரபுரம் இ. த. க. பாடசாலையில் நாளை மாலை சுந்தரமூர்த்திநாயனர் விழா கொண்டாடப்படவிருக்கின்றது. தலைமையாசிரியர் திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பல பாடசாலைகளையும் சேர்ந்த தலைமையாசிரியர்கள் உரையாற்றுவதுடன் பல பாடசாலை மாணவர்களின் நாடகம் உட்படப் பல கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

0 0

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் நாளை சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை நடைபெறவிருக்கிறது.

சரவணை சைவ இளைஞர் மன்றத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் காலை திருமுறை ஓதல் புராணபடனம், மகேசுர பூசை முதலியனவும் மாலையில் சித்தாந்த பண்டிதர் திரு. வே. சோமசுந்தரம், சைவப் புலவர் திரு. வை. இராமகிருஷ்ணஐயர், பண்டிதர் திரு. சோ தியாகராசா ஆகியோரது விரிவுரைகளும் இடம்பெறும்.

## காயப்படுத்தியதாக வழக்கு

### எதிரிகளுக்கு அபராதம்

வல்வெட்டித்துறை, செவ்.

துன்னலையைச் சோந்த வே. வல்லிக்குட்டி, சி கிட்டினன், த. மாசிலாமணி ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த க. இரத்தினத்திற்கு கடந்த மார்கழி மாதம் 18-ந் திகதி அடித்து படுகாயம் உண்டு பண்ணியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகள் மூவரையும் குற்றவாளியாகக் கண்டு 1-ம் எதிரிக்கு ரூபா 100 அபராதமும், 2ம் 3-ம் எதிகளுக்கு தலா ரூபா 75 அபராதமும் கட்டத்தவறினல் 5 வாரச் சிறைத் தண்டனை எனவும், ரூபா 500 பிணையில் 6 மாதம் நன்னடத்தைப் பிணை எனவும் தீர்ப்பளித்தார். அபராதம் செலுத்தினல் அப்பணத்தில் பாதியைக் காயமடைந்தவருக்கு கொடுக்கப்படும் எனவும் கூறினர்.

## 'ஈழநாடு' கடிதப் போட்டி—(3)

இரண்டாவது போட்டியில் பரிசு பெறும் கடிதம் கீழே பிரசுரமாகிறது. அதை எழுதியவர்: கா. சிவபாலன், 40, கல்பொத்தை வீதி, கொழும்பு-13. பாராட்டுக்குரிய இன்னெரு கடிதம் நாளை வெளியிடப்படும். இதை எழுதியவர்: கே. பரமேஸ்வரன், இருபாலைச்சந்தி, கோப்பாய்.

### அடுத்த போட்டி

ஈழத்திலும் பிறநாடுகளிலும் மக்களை எதிர்நோக்கும் ஏதாவதொரு முக்கியமான பிரச்னையை தேர்ந்தெடுத்து, 150 சொற்களுக்கு மேற்படாத கருத்துப் பொதிந்த கடிதம் ஒன்றை எமக்குஎழுத வேண்டும்.

### நிபந்தனைகள்

கடிதத்துடன் கீழ்தரப்படும் கூப்பனையும் கத்தரித்து எடுத்து அதில் உங்கள் பெயரையும் விலா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த

# அன்பு வழி



வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்
★ சரோஜாதேவி
நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்
நடித்த
கே. பாலச்சந்தரின்

# தாமரை நெஞ்சம்



5வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி

★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்
கீதாஞ்சலி
நடித்த



# நெஞ்சிருக்கும் வரை



2-வது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது

★ ரவிச்சந்திரன்
★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு
இன்னும் பலர் நடித்த
முக்தா பிலிம்ஸ் அளிக்கும்

# நினைவில் நின்றவள்


... கருத்துப் பொதிந்த கடிதம் ஒன்றை எமக்கு எழுத வேண்டும்.

### நிபந்தனைகள்

கடிதத்துடன் கீழ்தரப்படும் கூப்பனையும் கத்தரித்து எடுத்து அதில் உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சேர்த்து அனுப்ப வேண்டும். அனுப்பும் விலாசம் கடிதப்போட்டி (3) 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம். கடிதங்களை நேரடியாக ஈழநாடு காரியாலயத்திலும் சமர்ப்பிக்கலாம். எத்தனை கடிதங்களையும் ஒருவர் ஒரே தபால் உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றோடும் ஒரு கூப்பன் சேர்க்கப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. சிறந்த கடிதத்துக்கு ரூபா மூன்று பரிசு வழங்கப்படும். பாராட்டுக்குரியவை 'ஈழநாடு' தினப்பதிப்பில் தொடர்ந்து வெளியிடப்படும். கடிதங்கள் 27-7-69 க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும்.

'ஈழநாடு'
கடிதப் போட்டி (3)

பெயர் ..............................

விலாசம் ..............................

..............................

# ஈழத்தமிழர் முன்னேறவழி

இன்று இலங்கைத் தமிழரின் நிலை மிகவும் கீழான தரத்தை எய்திக் கொண்டிருக்கிறது. அரசியற் தலைவர்களெல்லோரும் எம்மிடம் ஒற்றுமை இல்லாதது தான் இந்நிலைக்குக் காரணம் என்று ஆளுக்கொரு மேடையில் நின்று கூவுகிறார்கள். உலக அரசியலில் கடைப்பிடிக்கப்படும் சில முயற்சிகளை நாமும் கையாண்டாலென்ன?

தமிழ் நாட்டிலே காங்கிரஸ் அரசை வீழ்த்த வேண்டுமென்ற நோக்கோடு அமைக்கப்பட்ட கூட்டணி வெற்றியீட்டியது நாமறிந்ததே! ஏன் எமது நாட்டின் சகோதர சிங்கள இனமக்கள் இன்று இரண்டு அணிக்குள் ஒற்றுமைப் பட்டிருக்கிறார்கள். இடதுசாரி அணியென்றும், வலது சாரி அணியென்றும் இரு அணிகளுக்குள் சேர்ந்திருந்தாலும் கட்சிகள் கலைந்துவிடவில்லையே?

நாமும் ஏன் குறைந்த பட்ச அடிப்படைத்திட்டத்தின் கீழ் கூட்டுச்சேர்ந்து கொள்ளக் கூடாது. தமிழ்க் கட்சிகள் எல்லாவற்றிற்கும் பொதுவானது ஏறக்குறைய ஒரே கொள்கைகளைக்கொண்டிருக்கும் பிரச்னைகளான சாதிப்பிரச்னை, அரசகருமமொழிப்பிரச்னை எழுதுவினைஞர் பிரச்னை, தமிழ்ப் பகுதிப் பொருளாதார முன்னேற்றம், தமிழ்ப் பிரதேச கல்வி முன்னேற்றம் ஆகியவற்றை வேலைத் திட்டங்களாகக் கொண்டு ஒன்றுபட்டு உழைக்கக் கூடாது? இவை நிறைவேறிய பின்னர் தமது இலட்சியங்களை முன்னிட்டுப் பிரிந்து போராடலாமே? இத்தகைய கூட்டணியை ஏற்படுத்ததமிழ்ப் பெருமக்கள் யாரேனும் முன்வந்து உழைப்பார்களா?

40, கல்பொத்தை வீதி,
கொழும்பு-13, 19-7-69

கா. சிவபாலன்

செலுத்தினுல் அப்பணத்தில் பாதியைக் காயமடைந்தவருக்கு கொடுக்கப்படும் எனவும் கூறினர்.


# அசலான பானம் அருந்துங்கள்
# யானை மார்க் பானம் அருந்துங்கள்










உபசார வைபவங்களில் உங்கள் கௌரவ விருந்தாளிகளை உபசரிக்க வழக்கமாக வழங்கும் பானம், யானை மார்க் ஓரேஞ் பார்லி அல்லது லங்காலைம் என்று ஒரு மரபு ஏற்பட்டுவிட்டது. ஏன் அப்படி...? ஏனெனில் 75 வருடங்களுக்கும் மேலாக எலிஃபன்ட் ஹவுஸ் தன் பானங்களின் தரத்தையும் தூய்மையையும் மேம்படுத்தப் பெருமுயற்சி எடுத்து யானை மார்க்கை, இன்று, பானங்களிலேயே அதி நம்பிக்கை வாய்ந்த நாமமாக்கிவிட்டது. உங்கள் விருந்தாளிகள், தாம் நன்கு உபசரிக்கப்பட்டதாகத் திருப்தி கொள்ள வேண்டுமானுல், அவர்களுக்கு யானைமார்க் பானங்களை வழங்குங்கள்.

கடற்கரையிலோ உல்லாசத் தலங்களிலோ ஒரு நாளை ஆனந்தமாகக் கழிக்க விரும்பினுல் தாகம் தீர்க்கும் குளுமையான யானை மார்க் பானங்களைக் கையோடு எடுத்துச் செல்லுங்கள். மணலில் விளையாடி அல்லது கடலில் நீராடி முடிந்ததும், யானை மார்க் பானங்களை தெம்பூட்டுகின்றன. உண்ண முன் பசியூட்டுவதற்காகவும் உண்டபின் உணவு உட்செல்லவைக்கவும் யானை மார்க் பானங்கள் உகந்தவை. பாடி ஆடி களைத்த பின் தொண்டைக்கு இதமூட்டிச் சோர்வை நீக்கச் சிறந்தவை யானை மார்க் பானங்கள். உங்கள் உல்லாசப் பயணங்களை, யானை மார்க் பானங்களின் துணையுடன் ஆனந்தமயமாக்குங்கள்.

CCS

## சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
### எலிபன்ட் ஹவுஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனைச் சுற்றிக்கொண்டிருக்கிறது 'ஈகிள்' கலம் பூமிக்குத் திரும்புகிறது 'கொலம்பியா' கப்பல்

## 'நெருக்கடிகடலில்' லூனு-15 விழுந்து நொறுங்கியதாம்

ஹூஸ்டன், ஜூலை '24

**பூமியிலிருந்து புறப்பட்டு சந்திரமண்டலத்துக்குள் பிரவேசித்து சந்திரனைச் சுற்றியபடியே சந்திரக் கலத்தை தாய்க்கலத்திலிருந்து பிரித்துக்கொண்டு வெற்றிகரமாகச் சந்திரனில் இறங்கி அங்கு சந்திர மண்ணில் கால்வைத்து கருவிகளைப் பொருத்தி பூமிக்குச் செய்தியனுப்பிவிட்டு சந்திரனின் மேற்பரப்பில் காணப்பட்ட மண்மாதிரிகளைத் தோண்டி எடுத்து பைகளில் சேர்த்துக் கொண்டு மீண்டும் தமது சந்திரகலத்தில் ஏறிக்கொண்ட விண்வெளி வீரர்களான ஆம்ஸ்ரோங்கும் எட்வின் ஆல்டிரினும் அடுத்து செய்யவேண்டிய மிக முக்கிய கடமைகளையும் வெற்றிகரமாகச் செய்துமுடித்துவிட்டு இப்பொழுது பூமிக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள்.**

சந்திர கலத்தை சந்திர மண்ணிலிருந்து கிளப்பும் நிகழ்ச்சியை உலகம் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தது. நேற்றிரவு கலத்தை சந்திரனிலிருந்து கிளப்புவதற்கு முன்னர் தமக்குத் தேவையில்லாத பொருட்களையெல்லாம் சந்திர வீரர்கள் சந்திரத் தரையில் போட்டார்கள். பின்னர் ஒரு ருெக்கட்டைப் பற்றவைத்து இரவு 11-32 மணிக்கு சந்திரமண்ணிலிருந்து கலத்தை மேலே கிளப்பினுர்கள். சந்திரக் கலம் வெட்டவெளியில் பறந்துகொண்டிருந்த தாய்க் கலமான கொலம்பியாவுடன் இணைவதற்காக அதனைப் பின் தொடர்ந்து பறந்து சென்றது. இரண்டும் இணைவதற்கு ஏற்ற தருணம் வந்ததும் கொலம்பியாவை செலுத்திக் கொண்டிருந்த கொலின்ஸ் தாம் தயாராய் இருப்பதாக அறிவித்தார். அதன்மேல் ஆம்ஸ்ரோங் சந்திரக் கப்பலான ஈகிளைவெகு சாமர்த்தியமாக கொண்டு வந்து கொலம்பியாவுடன் இணைத்தார். இது திட்டமிடப்பட்டதற்கு மிக முன்னதாகவே நடந்தது.

### எதிர்பாராத ஆட்டம் ஏற்பட்டது

இரு கலங்களும் ஒன்ருக இணைந்தபொழுது எதிர்பாராத விதத்தில் ஆட்டம் ஏற்பட்டதாக கொலின்ஸ் அறிவித்தார். ஆனல்ஹூஸ்டனிலுள்ள கட்டுப்பாட்டதிகாரிகள் அது என்னவென்று அறிவிக்கவில்லை இரு கலங்களும் மிகவும் வெற்றிகரமாக இணைந்து கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இரண்டும் இணைந்தபிறகு ஆம்ஸ்ரோங்கும், ஆல்டிரினும் சந்திரக்கலத்திலிருந்து குழாய்போன்ற வழியாக கொலம்பியாவுக்குள் நுழைந்து கொண்டனர். சந்திரனிலிருந்து எடுத்துவந்த மண்மாதிரிகளையும் அவர்கள் கொலம்பியாவுக்குள் எடுத்துக்கொண்டனர்.

'நாங்கள்மீண்டும் சேர்ந்து கொண்டது மிகவும் நல்லது கொலின்ஸ் ஆறுதலடைந்தார்.

அதன்பின் சந்திரனைவலம் வந்தபடியே சேய் கலமான ஈகிள் கலத்தை தாய்க்கலம் கொலம்பியா விலிருந்து கழற்றி விட்டனர். இரண்டும் மோதிக் கொள்ளாதவாறு சரி செய்து கொண்டனர் ஈகிள் இப்பொழுது ஆளில்லாத நிலையில் சந்திரனை வலம்வந்துகொண்டிருக்கின்றது.

### அபாயக் கட்டங்கள் இன்னும்உண்டு

இந்தப் பிரயாணத்தின் உச்சக்கட்டம் சந்திரனில் இறங்குவதும் கால்வைப்பதும் அங்கு கருவிகளை பொருத்திவிட்டு மண்மாதிரிகளை எடுத்து வருவதும் தான் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் சந்திரனில் இறங்கி அங்கு செய்யவேண்டிய கடமைகளைச்செய்தபின், அங்கிருந்து வெற்றிகரமாகப் புறப்பட்டு தாய்க்கலத்துடன் இணைவதையும் அவர்கள் சாமத்தியமாக முடித்து விட்டார்கள். இப்பொழுது சந்திர பட்டால் வேறு ஒரு கிரகத்துக்கு அவர்கள் போய்ச்சேர நேர்ந்துவிடலாம். சந்திர மண்டலத்திலிருந்து புறப்பட்டு வந்து பூமியின் காற்று மண்டலத்திற்குள் நுழைவது இன்னுமொரு அபாயக் கட்டமாகவிருக்கும்.

## பூங்காவில் கேட்டனர்

யாழ்ப்பாணம், புதன்

அப்பலோ-11 விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கியதுபற்றி வானெலி ஒலிபரப்பை யாழ்ப்பாணத்தில் பல மக்கள் சுப்பிரமணியம் பூங்காவில் கூடி நின்று இரவிரவாகக் கேட்டனர்.

உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம், மாநகர சபைத் அங்கத்தவர் திரு. நா. த. செல்லத்துரை ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் மேயர் இவ்விதம் பூங்காவில் இரவு முழுவதும் வானெலி ஒலிபரப்பை மக்கள் கேட்பதற்கு ஒழுங்கு செய்திருந்தார். (தே. நி

## 'உபகரணங்கள் தான்தேவை'

மட்டுவில், செவ்வாய்

''தண்ணீர் பெறுவதையே முக்கிய பிரச்னையாகக் கொண்டுள்ள தென்மராட்சி விவசாயிகளுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களையும், உழவுயந்திரங்களையும் இறக்குமதி செய்து கொடுப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் அவசியம்செய்து கொடுக்க வேண்டுமேதவிர, விவசாயக்கடனைக்கொடுத்து வீணில் எமது அரிசிக்கூப்பன்களைப் பறிமுதல் செய்ய வேண்டாம்.''

இவ்வாறு தென்மராட்சி விவசாயிகள் குறைபட்டுக் கொள்ளுகிருர்கள்.

தென்மராட்சி விவசாயிகளில் ஒருவரான திரு. வைத்திலிங்கம் கூறியதாவது,

''இன்று எமது விவசாயம் தண்ணீர் இன்மையால்தான் பாதிக்கப் படுகிறது. என்பது சகலரும் அறிந்த உண்மை. இது இப்படி இருக்க, தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை, எமது பல நோக்கு கூட்டுறவு சங்க மூலம் பெற்றுத் தருவதாக கூறியிருந்தும் இதுவரை நடைபெறவில்லை. கடந்த ஆண்டிலும் இவ்வாண்டு 18 சத விகிதம் இந்த இயந்திரங்களின் தீர்வையை அர

## 'முத்தமிழ் பேணும் நிறுவனங்களாக கல்லூரிகள் திகழவேண்டும்'

கோப்பாய், செவ்.

''இன்றைய சினிமா தமிழ் இசை, நாடகம் போன்ற பல துறைகளைக் கெடுக்குமளவுக்கு மேற்கத்தியபாணியில் சென்று கொண்டிருப்பது அபாயகரமானது. மாணவர்கள் நல்ல இலக்கியங்களுக்குப் பதிலாக தரமற்ற சினிமா நூல்களை தமதுமணி நூலாகக் கொள்வதும் நமது கலாச்சாரத்தைக் கெடுத்துவிடுமோ என எண்ணத் தூண்டுகிறது. கல்லூரிகளும் ஆசிரிய கலாசாலைகளும் முத்தமிழைப் பேணும் நிறுவனங்களாக மிளிர வேண்டும்''

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நடைபெற்ற ஐந்தாவது தமிழ் விழாவின் உரையங்கு நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக உப அதிபர் திரு. கே. சிவபாலன் மேற்கண்டவாறு கூறினுர்.

அடுத்து திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பேசுகையில் ''தமிழ் நாடகத்துறை பண்டை மரபுடையதெனப் பழம் பெருமை பேசுவதால் பயனில்லை. எமது முன்னேற்றம் திருப்தியற்றது. பல புதிய சோதனைகளை இத்துறையிற் புகுத்த முன்வர வேண்டும்'' என்ருர்.

பாரதிக்குப் பின்னர் கவிதை வளர்ச்சியில் புதிய தெருதிருப்பம் உண்டாகியுள்ள தெனவு இத்திருப்பத்தை மேலும் வளர்க்க கவிஞர்கள் முன்வர வேண்டுமெனவும் பண்டிதர் மு. ஆறுமுகம்பேசுகையில் சொன்னுர்.

ஆசிரியை திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் தலைமையில் கருததரங்கும்வித்துவான் க. கி. நடராஜன் தலைமையில் கவியரங்கும் கலையரசு கே. சொர்ணலிங்கம் தலைமையில் கலையரங்கு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## 'அரசியல் மாற்றம் மூலம் தீண்டாமையை ஒழிக்கலாம்'

யாழ்ப்பாணம், புதன்

அரசியல் மாற்றம் மூலம் தான் சிறுபான்மைதமிழரின் உரிமைகள் கிடைக்க வழி பிறக்கும். நாடுமுழுவதும் பரவலாகஇருக்கும், உரிமை குறைந்த ஏழை மக்களுடன் இங்குள்ள சிறுபான்மை தமிழரும் சேர்ந்த ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொள்வதன் மூலமே தீண்டாமை பிரச்னைக்கு தீர்வு காணலாம்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நற்று நடந்த காலஞ்சென்ற யோவல் போல் ஞாபகார்த்தகூட்டத்தில், மல்லாகம் கிராமசபை தலைவர் திரு. வி. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. [illegible]ன். ரி. செல்லத்[illegible] தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வி பொன்னம்பலம்

நமகு உதவியாக இருந்தார். சிறுபான்மைத்தமிழர் மகாசபையுடன் நீண்ட காலமாக தொடர்புகொண்டிருந்த அவர் சம உரிமை பெறுவதற்காக பாடுபட்டார்.

சிறுபான்மைத் தமிழர் நிலைகண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காக இயக்கங்கள் நடத்தவேண்டுமெனக்கருதிய அவர், அரசாங்க உத்தியோகத்தில் சேராது சுதந்திரமாக கட்டட தொழில் நடத்தி சமூகசேவை செய்துவந்தார். அவர் தொடங்கிய பணியை நாம்செய்துமுடிக்க வேண்டும்.

## 'ஆபத்திலிருந்து தப்புவதற்கு நீச்சல் பயிற்சி உதவும்''

அளவெட்டி, செவ்.

''ஒவ்வொரு மனிதனும் நீச்சல் துறையில் பயிற்சி பெற்றிருந்தால் நீரிலேற்படும் அபாயங்களினின்றும் தன்னைக் காப்பாற்றுவதுமல்லாமல், பிறரையும் காப்பாற்றமுடியும். ஆதலால் மனித சமுதாயத்திற்கு இந் நீச்சல்துறை இன்றியமையாதது'' என கீரிமலையில் நீச்சல் பயிற்சியை நடத்திய மேற்கு ஜெர்மன் நீச்சல் பயிற்சியாளர் திரு. ரெயினீர் பிராங் கூறினுர்.


விளையாட்டு உத்தியோகத்தர்களான கே. கந்தசாமி, என். நடராசா, ஸ்ரீதரன், தேவபாலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தெல்லிப்பழைக் கிராம சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் மங்கள விளக்கேற்றிப் பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

இப்பயிற்சி வகுப்பை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எ. டி. பி. யேசுதாசனும், வலி-வடக்கு (காங்கேசன்துறைப் பகுதி) விளையாட்டு உத்தியோகத்தர் திரு. கே. கந்தசாமியும் ஒழுங்கு செய்திருந்தனர்.

காங்கேசன்துறைப் பகுதி விளையாட்டுக் கழகங்களும், வலி-மேற்குப் பகுதி விளையாட்டுக் கழகங்களும், வட பகுதியிலுள்ள பல கல்லூரிகளும் நீச்சல் பயிற்சியில் கலந்தன.

## புதிய ஜே. பி



யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நீதி பரிபாலன மாவட்டத்திற்கான சமாதான நீதவாளுக குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. தாமோதரம்பிள்ளை இளையதம்பி நீதி அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மழைய மாணவரான இவர் பெரும்பகுதி தபாற் கந்தோர்களின் அத்தியட்சகராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ளார். தற்போது குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராக இருந்து கிராம அபிவிருத்தித் திட்டங்களிலும் சமூக சேவையிலும் தொண்டாற்றி வருகிருர். இவரின் முயற்சியினல் அரசாங்க உதவியுடன் குரும்பசிட்டி நெசவு நிலையம் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ......

## புதிய கிணறு

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் கிராமசபையின் பத்தாம் வட்டாரத்தில் ஒரு புதிய பொதுக்கிணறு வெட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நல்ல தண்ணீர் பெற்றுக்கொள்வதற்காகவும், பலருக்கு கிணறு இல்லாப் பிரச்னையைப் போக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நைரோபி, ஜூலை 22

கென்யா அமைச்சர் டொம்போயாவைக் கொலை செய்தவனை கென்யா பொலிசார் பிடித்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உச்சக்கட்டம் சந்திரனில் இறங்குவதும் கால்வைப்பதும் அந்த கருவிகளை பொருத்திவிட்டு மண்மாதிரிகளை எடுத்து வருவதும் தான் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் சந்திரனுக்குப் போய்ச் சேருவதில் இருந்தது போலவே திரும்புவதிலும் பல அபாய கட்டங்களை சந்திர வீரர்கள் கடக்க வேண்டியிருக்கின்றது.

செய்யவேண்டிய கடமைகளைச்செய்தபின், அங்கிருந்து வெற்றிகரமாகப் புறப்பட்டு தாய்க்கலத்துடன் இணைவதையும் அவர்கள் சாமத்தியமாக முடித்து விட்டார்கள். இப்பொழுது சந்திர மண்டலத்திலிருந்து புறப்படுவதற்கான முக்கிய ரொக்கட்டை வெடிக்கச் செய்வது அடுத்த அபாய கட்டமாகவிருக்கும் இதில் பிசகு ஏற்படுக்கு அவர்கள் போய்ச்சேர நேர்ந்துவிடலாம். சந்திர மண்டலத்திலிருந்து புறப்பட்டு வந்து பூமியின் காற்று மண்டலத்திற்குள் நுழைவது இன்னுமொரு அபாயக் கட்டமாகவிருக்கும்.

இவைகளையும் சர்துர்யமாக செய்துமுடிக்க முடியும் என்று சந்திரவீரர்கள் நம்பிக்கையோடு இருக்கிறார்கள்.

# சோவியத் கலம் லூனா-15 ‘நெருக்கடி ‘கடலில்’ இறங்கியது

சந்திரனில் ‘நெருக்கடி கடல்’ என்று குறிக்கப்பட்டுள்ள பகுதியில் சோவியத் யூனியன் அனுப்பியுள்ள லூனா-15 என்ற ஆளில்லா கலம் இறங்கி உள்ளது. இக்கலம் குறிப்பிட்ட திட்டங்களை செவ்வனே நிறைவேற்றியுள்ளதாக மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டுள்ளது ஆனல் அது அங்கு இறங்கி மண் மாதிரி எடுத்துக் கொண்டு வருமா என்பது பற்றி எதுவித தகவலும் இல்லை ஏற்கனவே திட்டமிட்ட இடத்தில் சந்திரனில் கலங்களை இறக்க முடியும் என்பதை லூனா-15 வெற்றிகரமாக நிறைவேற்றியிருப்பதாக ரஷ்யர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தக் கலத்தின் செயல்களை கவனித்து வந்த பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அது மிகவேகமாக இறங்கி நொருங்கியிருக்க வேண்டும் என்று கருத்துவெளியிட்டிருக்கிறார்கள். ரொககட் எரிந்து கொண்டிருந்த பொழுதே லூனா-15 இறங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சந்திரனில் இறங்கியதும் லூனா-15 வின் சமிக்ஞைகள் நின்று விட்டதாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கூறினார்கள்.

அமெரிக்க ‘ஈகிள்’ கலம் இறங்கிய இடத்திலிருந்து சுமார் 800 கிலோமீட்டர் தொலைவில் லூனா-15 இறங்கியுள்ளது. அமெரிக்க ஈகிள் இறங்கிய இடத்தின் பெயர் ‘அமைதிக்கடல்’ ரஷ்யக் கலம் இறங்கிய இடத்தின் பெயர் ‘நெருக்கடிகடல்’

## தேச உடமையான இந்திய வங்கிகள்

புதுடில்லி, ஜூலை 22

இந்தியாவிலுள்ள பெரிய வங்கிகளை தேசஉடமையாக்கும் சட்டத்தின்படி 14 வங்கிகள் நேற்றிரவுஅரசாங்கம். பொறுப்பேற்றது.

அந்த வங்கிகளின் பெயர் பின்வருமாறு.

1சென்றல் பேங் ஆப் இந்தியா, 2பாங் ஆப் இந்தியா, 3 பஞ்சாப் நேஷனல் பாங், 4 பாங் ஒப் பரோடா, 5யுனைட்டட் கமர்ஸியல் பாங் 6 கனரா பாங், 7 யுனைட் பாங் ஆப் இந்தியா, 8 சேனு பாங், 9 சிண்டிகேட் பாங், 10 யூனியன் பாங் ஆப் இந்தியா 11அலகபாத் பாங்க் 12 இந்தியன் பாங், 13 பாங் ஆப் மஹாராஷ்ரா 14 இந்தியன் ஓவசீஸ் பாங்க்.

## சஞ்சீவரெட்டி வேட்பு மனு தாக்கல்

புதுடில்லி, ஜூலை 22

இந்திய ஜனதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் மூன்று முன்னாள் லோக்சபா சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டன.

திருவாளர்கள் நிசலிங்கப்பா, திரு. சவான் திரு. சிறிராம ரெட்டி ஆகியவர்கள் இந்த மனுக்களில் திரு. சஞ்சீவரெட்டியின் பெயரை முன் மொழிந்திருக்கிறார்கள்.

## மார்டின் லூதர் கிங் சகோதரரும் மரணம்

வாஷிங்டன், ஜூலை 22

சிவில் உரிமை போராட்ட வீரர் மார்ட்டின் லூதர் கிங்கின் சகோதரர் வண. வில்லியம்கிங் அட்லாண்டாவிலுள்ள தமது இல்லத்தில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

சிவில்உரிமைபோராட்டத்தில் இவரும் முக்கிய தலைவர். இறந்துகிடந்த அவருடைய சடலத்தை அவரது குழந்தைகள் கண்டு பிடித்தனவாம்.

## ‘நாளுக்குநாள் அதிகரிக்கிறது’

உடுப்பிட்டி, செவ்.

“வேலையில்லாப் பிரச்னை இலங்கையில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. தேசிய அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையே இவ்வபாய நிலைக்குக் காரணம். வேலையற்றவர்கட்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டும் அல்லது வேதனம் கொடுக்கவேண்டும்.”

இவ்வாறு அடுத்தபொதுத் தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் கம்யூனிஸ்ட் அபேட்சகராகப் போட்டியிடத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. பொன். குமாரசாமி நெல்லியடி செல்லம் மில்லில் நடைபெற்ற மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை ஆலோசனைக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. கெங்காதரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு வி. பொன்னம்பலம் ஜே. பி. பேசுகையில், “விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு நவீன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிடில் உணவுற்பத்தி ஒருபோதும் அதிகரிக்கமாட்டாது” என்று கூறினார். திரு. ஜெயசிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர்.

## தலைமையாசிரியர் இல்லை

சுழிபுரம், செவ்.

தொல்புரம் அமெரிக்கன் மிஷன்பாடசாலைக்குதலைமையாசிரியர்இல்லை. சகலவேலைகளையும் ஓர் உதவி ஆசிரியரே கவனித்துவருகின்றார். தலைமையாசிரியரை உடன் நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் வட்டுக்கோட்டை தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரிடமும் முறையிட்டுள்ளனர்.

மூலம் பெற்றுத் தருவதாக கூறியிருந்தும் இதுவரை நடைபெறவில்லை. கடந்த ஆண்டிலும் இவ்வாண்டு 18 சதவிகிதம் இந்த இயந்திரங்களின் தீர்வையை அரசாங்கப் உயர்த்தி உள்ளது. இந்த நிலையில் ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கம் விவசாயக்கடன் என்ற பெயரால் ஒரு சிறு தொகையைக் கொடுத்து அவரகளைக் கடனாளிகளாக்குவதைத் தவிர வேறு எதுவித பலனும் இல்லை. கூப்பனைப் பறிகொடுக்கநேரும். எனவே, அரசாங்கம் விவசாய உபகரணங்களின் தீர்வையைக் குறைத்தும் விவசாய உபகரணங்களை இங்குள்ள விவசாயிகள் பெற்றுப் பலனடையும் வழிவகைகளைக் கையாளவேண்டும்”

## “ஆன்மீகத்துக்கும் உழையுங்கள்”

கோப்பாய், செவ்.

“நல்ல பல சைவச் சான்றோர்களைத் தந்துள்ளது நமது கிராமம். பழங் காலத்தில் புராண இதிகாசங்களைக் கற்று வாழ்க்கையை ஆன்மீக நெறியில் செலுத்தியவர்கள் நம் முன்னோர்கள். புராணங்கள், காவியங்கள் முதலியவற்றைக் கற்பதன் மூலம் நமது வாழ்வும் நல்ல முறையில் அமையக் கூடியதாக வுள்ளது. ஆகவே விவசாய மக்கள் பொருளாதாரத்தை உயர்த்துவதோடு அமையாது ஆத்மீகத்தையும் வளர்க்கஉதவ வேண்டும்.” என வலி, கிழக்குக் காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை கோப்பாய் தெற்கு ஞானபாஸ்கரோதய சன சமூகநிலையத்தாரால் நடாத்தப் படும் மகாபாரதப் படிப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

## அக்டோபரில் பரீட்சை

கோட்டை, செவ்.

அக்டோபர் 31-ம் தேதி தந்தியாளர், அஞ்சல் அதிபர் நியமனப் பரீட்சை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருட்டு

புலோலி, செவ்வாய்

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் தான் கொண்டு வந்த பணத்தை அச்சுவேலி பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்துப் பறி கொடுத்தார்.

அச்சுவேலியில் இறங்கி மறுபடியும் பஸ்ஸில் ஏறும் பொழுதே மேற்படி திருட்டு நடைபெற்றதாம்.

தலைவர் திரு. வி. பொன்னம்பலம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. என். ரி. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வி பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: தற்பொழுதுள்ள ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்குப் பதிலாக, ஸ்ரீலங்கா, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான், சிறுபான்மைத் தமிழரின் பிரச்னைகள்தீர வழி பிறக்கும். கூட்டரசாங்க காலத்தில், தீண்டாமை பிரச்னைக்கு விரிவான ஒரு தீர்வை ஏற்படுத்தலாம் என்பது எனது அரசியல் ரீதியான கருத்து.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிகாலத்தில் சிறுபான்மை தமிழருக்கு, கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும்அளிக்கப்பட்ட உதவிகள் இன்று அளிக்கப்படவில்லை. சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி அனுப்பிய கடிதங்களுக்கே பதில் போடாத பிரதமர் அவர்களின் பிரச்னைகளை தீர்ப்பார் என எதிர்பார்க்க முடியுமா?

காலஞ்சென்ற யோவல் போல், சிறுபான்மை தமிழரின் முன்னேற்றத்திற்காக பல தொண்டுகளைச்செய்தார். அவர் தொடக்கி வைத்த இயக்கங்கள் இன்று நடைபெற்றுவருகிறது.

சுன்னுகம் பட்டனசபை தலைவர் திரு. பீ. நாகலிங்கம் பேசும்போது, சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றத்திற்கு எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு காலஞ்சென்ற போவல் போல் உழைத்தார். அன்றுள்ள சூழ்நிலையில் அவர் செய்தது பெரிய காரியம். 1925-ம் ஆண்டு காங்கேசன் துறையில் கலியாண சுந்தர முதலியார் தலைமையில் வாலிபர் மகாநாட்டில் சம ஆசனம் சம போசனம் நடைபெற்றது 40 வருடமாகியும் இன்னும் பிரச்னை தீரவில்லையே என்று சிலர் கூறலாம். வாலிபர் இயக்கத்தை சேர்ந்த திரு. ஸ்ரீஸ்கந்தராசா தான் 56-ம் ஆண்டு நல்லூர் கந்தசாமி கோவிலைத் திறந்துவிட்டார். இதேபோல் அன்று வாலிபர் இயக்கத்தில் ஈடுபட்டவர்களெல்லாம் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு பல வழிகளாலும் பாடுபட்டு வருகின்றார்கள்.

சிறுபான்மைத் தமிழா மகாசபை தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசும் போது கூறியதாவது: காலஞ்சென்றபோல் தற்போது நடைபெற்றுவரும் ஆலயப் பிரவேச இயக்கத்திற்கு பூரண ஆதரவை அளித்ததோடு, பல வழிகளாலும்

வேண்டும்.

லாப் பிரச்னையைப் போக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கென்யா அமைச்சர் டொம்போயாவைக் கொலை செய்தவனை கென்யா பொலிசார் பிடித்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.


# டேவிட் பிரவுண் ட்ராக்டர்கள் சிறந்தவை என்பதற்கு பிரதான 7 காரணங்கள்

உண்மையில் டேவிட் பிரவுண் ட்ராக்டர் சிறந்தது உங்கள் வேலைகளுக்குகந்தது என்பதற்குப் பல காரணங்களிருப்பினும், நாங்கள் 7 சிறப்பான விஷேச அம்சங்களை மட்டும் கூறுகிறோம். மேலும் நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டாலோ அல்லது நேரில் வருகை தந்தாலோ நாங்கள் அதன் மிகச் சிறந்த பலாபலன்களை உங்களுக்கு மகிழ்சியுடன் தெரிவிக்கக் காத்திருக்கிறோம்.

- இன்று துரிதமாக விற்பனையாகும் ட்ராக்டர்.
- உங்கள் தேர்வுக்கு 36-46-55-72 குதிரைச் சக்தி கொண்ட 4 வித ட்ராக்டர்கள்.
- பலவிதமான இணைப்புக்கருவிகளும் கையிருப்பிலுண்டு,
- உதிரிப்பாகங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன.
- இயக்குவதற்கு மிக வசதியான ட்ராக்டர்.
- ரோலண்ட்ஸ் ஸ்தாபனத்தின் உத்தரவாதம் கொண்டது.
- இலங்கை முழுவதிலும் பாவனைக்குப் பின் கிடைக்கும் சேவை வசதிகளுக்கு உத்தரவாதம்.



ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்

103 [illegible] ரோட் கொழும்பு 7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

"அகிம்சையுடன் இணைந்த சத்தியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமே உலகையே உன்காலடியில் வணக்கச் செய்யலாம்."

—மகாத்மாகாந்தி

**ஈழநாடு**

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 8 ந் திகதி (23-7 69)

## இந்திராவின் வெற்றி

இந்திய காங்கிரசிலும் இந்திய மத்திய அரசாங்கத்திலும் தோன்றிய அரசியல் நெருக்கடியை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தன்னம்பிக்கையுடனும் துணிச்சலுடனும் சமாளித்து வெற்றி ஈட்டியுள்ளார்.

பிரதமர் இந்திராவின் துணிச்சல் மிக்க செயல் பற்றி பிரபல இந்திய ஆங்கிலத் தினசரியான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. பிராங்க் மொராயஸ் எழுதுகையில் "வங்கிகளைத் தேசியமயமாக்கி விட்டதால் அதை ஏற்று அதன் விளைவுகளை எதிர் நோக்க வேண்டியதுதான் என்றுகுறிப்பிட்டுவிட்டு "நாட்டின் எதிர்காலம் கிழடுகளின் கையிலல்ல இளசுகளின் கையில் தான் தங்கியிருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் பிரதமர் பின்பற்றும் தீவிர இடது சாரிக் கொள்கையும் அவரது சிறுபிள்ளைத்தனமான மனிதர்களும் இந்தியாவின் உண்மையான நலனில் அக்கறையுள்ளவர்களா? என்பதையும் இளைஞர்கள் தான் தீர்மானிக்க வேண்டுமென்றும் கூறுகிறார். மாஸ்கோவின் தாளத்துக்கு இந்திரா ஆடுவதாகவும் அவர் எழுதுகிறார்.

இந்தியாவிலுள்ள முக்கிய பெரிய பதினான்கு வங்கிகளை அவசரச் சட்டத்தின் மூலம் பிரதமர் இந்திரா தேச உடமையாக்கிப் பிரகடனப் படுத்தியதை சுதந்திரா, ஜன சங்கம் ஆகிய இரு கட்சிகளையும் தவிர இந்தியாவிலுள்ள இதர அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் தெரிவித்திருக்கின்றன. குறிப்பாக இளைஞர்கள் இந்திராவின்

பணம் ஒருசிலரிடம் குவிவதற்கு வங்கிகள் பயன்பட்டு வருவதை மாற்றி அவை பொது மக்களின் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் பயன் படக் கூடியதாக வழிவகை காணப்பட வேண்டுமெனவும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தீர்மானித்ததில் யாரும் தவறு சொல்வதற்கில்லை.

இந்திரா ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாதவர் அல்ல என்பதை அவர் தமது செய்கைகள் மூலம் பல தடவைகளிலும் நிரூபித்திருக்கிறார். தந்தையைப் போல தனி வழி காண்பவர் அவர். முக்கிய பெரிய வங்கிகளைத் தேசஉடமையாக்கிப் பிரகடனம் வெளியிட்டதும் நாட்டுமக்களுக்கு விடுத்தசெய்தியில் எந்தப் பக்கத்தையும் சார்ந்து பின்பற்றும்நோக்கம் தமக்கில்லையென்றும் இந்திய நாடு தனக்கெனத் தனிவழியில் செல்லவேண்டுமென்றும் தனது நாட்டுக்கேற்ற வழியை வகுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தெளிவாக்கினார். முக்கிய வங்கிகள் தான் தேசஉடமையாக்கப் பட்டிருக்கிறதேயொழிய இதர துறைகளையும் தேசியமயமாக்கும் யோசனை இல்லையென்றும் அவர் விளக்கியிருக்கிறார். இருபத்திரண்டு ஆண்டுகால அனுபவத்தின் பின் முக்கியவங்கிகளைத் தேசஉடமையாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை இருந்த நிலைமையைவிடவா இந்த தேசஉடமை நடவடிக்கை மோசமாக்கிவிடப்போகிறது?

வங்கிகளைத் தேசஉடமையாக்குவது உட்பட 19 அம்சங்களைக்கொண்ட பொருளாதாரஅபிவிருத்தித் திட்டமொன்றை பிரதமர் இந்

# தாய்மார்களுக்கு ஆறுதல் தரும் சந்திரன்

## புதிய சாதனையால் ஏற்பட்டுள்ள திருப்பம்

இப்படியொரு நிகழ்ச்சியைப பார்க்க, கேட்க நாம் கொடுத்துவைத்திருக்க வேண்டும். நாம் உயிருடன் இருக்கும் போதே நடந்தது நல்லது. மனிதனின் ஆற்றலை- அவனது மூளையின் திறனை அறிந்துகொள்ள கிடைத்த சந்தர்ப்பம் ஒரு பெரும் பாக்கியம்தான். ஒரு புதிய உலகத்துக்கல்லவா மனிதன் போய்விட்டுத் திரும்பிவிட்டான்.

21-ம் திகதி மனிதவரலாற்றில் மறக்க முடியாத ஒரு பொன்னாள். மனித ஆற்றலின் வளர்ச்சிக்கு முயற்சியின் உயர்ச்சிக்கு ஓர் உயர்வு தந்தநாள் என்று சொல்லலாம். இத்தினத்தில்தான் தேன்நிலவாகக காதலருக்கு இனிமை தந்த நிலாவை மனிதன் தேடிக் கண்டுபிடித்ததினம். மறைமுகமாகத் தூதுசென்று கொண்டிருந்த நிலாவை மனிதன் கண்டு பிடித்ததினம். மனிதன் மறக்கமுடியாத தினம். கடலில் விழுவதாகவும் ஏதோ ஒரு பிம்பமாகவும் எத்தனையோ மயக்க உணர்வுகளைத் தூண்டி இரவெல்லாம் நின்று பகலில் ஒளித்திருந்த சந்திரனை மனிதன் கண்டுவிட்டான் என்றால்- அதில்காலடி எடுத்துவைத்து விட்டானென்றால்- அதுவும் நாம் வாழும்போதே நடந்துவிட்டதென்றால் நாம் பெருமிதம் அடையாமலிருக்க முடியுமா?

'ஏன் பிறந்தாய் மகனே' என்ற அழு குரல் தாலாட்டு அர்த்தமற்றதாக்கப்பட்டு விட்டது. இந்த உலகத்தில் வாழமுடியாவிட்டாலும் வாழககூடிய உலகங்களெல்லாம் வேறு இருக்கும் மனிதன் அதனைக் கண்டுபிடித்துவிடுவான். அங்கு நாம் சென்று வாழலாம் என்ற ஒரு நம்பிக்கை கூட இப்போது உதயமாகியிருக்கிறது.

'அப்பல்லோ-11' என்ற பெயரை11-வதுபிள்ளைக்குத் தாய் ஒருத்தி வைத்துவிட்டாளென்றால் அதில் இந்த நம்பிக்கையின் குரல்தானே எதிரொலிக்கிறது. வாழும் இடம் குறுகிவிட்டதுஇந்தப் பிள்ளைகளெல்லாம் எங்கே போய் வாழப்போகிறார்கள் என்ற கவலை தேய்பிறை போல் தேய்கிறது. எதிர்காலம் முழு நிலாப்போல் விஞ்ஞானத்தினால் பிரகாசமாகத்தான் தெரிகிறது.

என்மகன் சந்திரனுக்குப் போகவேண்டும் செவ்வாய்க்குப் போகவேண்டுமென்று ஒவ்வொரு தாயும் தாலாட்டுடன் கலந்து பாடுவது காதில் கேட்கிறது.

அப்பப்பா ...... நம்ப முடியவில்லை. சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்த ஆம்ஸ்ட்ரோங்கின் மனைவி ஜேன் கணவன் சந்திரனில் இறங்கியதைமுதலில் நம்பவில்லை ஆனால் என்ன செய்வது நம்பித்தானாகவேண்டியேற்பட்டு விட்டது.

ஆல்ட்ரினின் மனைவிக்கு இதெல்லாம் ஒருபெரியநாடகம்பார்ப்பது போலிருந்தது.

'ஈகிள்' என்றசந்திரக்கலத்தில் இருவரையும் சந்திரனில் இறக்கிவிட்டு தாய்க் கப்பலில் சந்திரனைச் சுற்றி அவர்களுக்கு எந்நேரத்திலும் பாதுகாப்பளிக்கத் தயாராக அது சுற்றிக்கொண்டிருந்த மைக்கேல் கொலின்சின் மனைவி இதுஒரு பெரிய சாதனைதானென்றார்.

விஞ்ஞானமா? அடுப்புமூலை தானே அவர்களது வேலை ஸ்தலம் என்ற நிலை மாறி விட்டது. மாற்றப்பட்டுவிட்டது. அதுவும் ஓரிரு தினங்களில் பெண்கள் கைகளில் இப்பொழுது பத்திரிகைகள் ஆடம்பர அலங்காரங்களை பார்க்க அல்ல. புதியரக சேலை எப்படி வந்திருக்கிறது என்பதைப் பார்க்க அல்ல சந்திரன் பற்றிய செய்திகளை துருவித்துருவி அறிந்துகொள்ள மண்ணில் விளையாடும் தம் பிள்ளைக்கு சந்திர மண்ணைப்பற்றி தாய் வாசிக்கிறாள். கேளடா கண்ணுகேள் சந்திரனிலிருந்து மனிதன் மண் கொண்டு வந்துவிட்டானமடா?

அந்தக் குழந்தையின்வாய் ஆச்சரியத்தால் திறக்க வாயில் சோற்றை ஊட்டி சந்திரன் பற்றிய உண்மைச் செய்தியை அவள் ஊட்டுகிறாள். 'நான் எப்ப அம்மா சந்திரனுக்குப் போவது?' குழந்தையின் பதில் அவளுக்கு ஏதோ ஒரு பெருமிதத்தை தருகிறது. சாதாரணமாக இப்பொழுதுஇந்தக் காட்சிகள் காணக் கூடியதாக இருக்கிறது.

அங்கே பேய் இங்கே பிசாசு என்ற கேள்விகள் ஓடி ஒழிந்த இடம் தெரியவில்லை

சந்திரனில் கற்பாறைகள் உண்டு பூமியும் சந்திரனும் சுற்றி வருகிறது இதனால் தேய்வது போலவும் வளர்வது போலவும் தெரிகிறது சந்திரன். அதில் எரிமலைகள் உண்டு. இப்படி சாதாரண குழந்தையைக் கேட்டாலும் இப்பொழுது பதில் கிடைக்கும்.

சந்திரனில் இறங்கிய முதல் மனிதன் ஆம்ஸ்ட்ரோங் வைத்த காலடியின் விஸ்தீரணம் 6 அங்குல அகலமும் 13 அங்குல நீளமும் கொண்டதுதான் (ஆம், ஆம்ஸ்ரோங் அணிந்திருந்த இடதுகால் சப்பாத்தின் அளவு இதுதான்) ஆனால் இந்த அடியைத் தொடர்ந்து அவரே சொன்னதுபோல்மனிதன் எத்தனையோ அடிகள் முன்னேறப் போகின்றான். இந்த நம்பிக்கைக்கான முதற்படி இது.

இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் செவ்வாய்க்கிரகத்தில் மனிதன் காலடி எடுத்து வைத்துவிடலாம் என இப்போது விஞ்ஞானிகள் கருத்து வெளியிடத் தொடங்கி விட்டார்கள்.

மற்றக் கோளங்களில் மறைக்கப்பட்டுக்கிடக்கும் பொக்கிஷங்களெல்லாம் மனிதனுக்குச் சமமாகக் கிடைத்துவிட்டால் மறுஉலகம் தேடுபவர்கள் தொகை குறைந்துவிடும் அடுத்த உலகங்களிலிருந்துதான் பசியும் பிணியுமற்ற நமது செழிப்பை ஐக்கியத்தை உயர்வை போட்டி, பொறாமையற்ற இந்தப் பொன்னுலகத்தைப்பார்க்க வருவார்கள் பலர்.

—கணேஷ்

## மட்டுநகரில் கல்வி நூற்றாண்டு விழா

## 'விளையாட்டு ஒரு பாடம்'

உடுப்பிட்டி, செவ்வாய் கரணவாய் தெற்கு சோளங்கன் மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் அதிபர் திரு. சி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றன.

அதிபர் தனது உரையில், "மாணவர்கள் விளையாட்டைவெறும்விளையாட்டாகக் கருதக்கூடாது. வாழ்க்கையில் துணிவையும், நம்பிக்கையையும் எமக்கூட்டும் பாடமாகக்கருதவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

பச்சைஇல்லம் 196புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தையும்நீலஇல்லம்167புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும், சிவப்புஇல்லம் 163புள்ளிகளைப் பெற்றுமூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

......

## பரிசு பெற்றவர்கள்

சுழிபுரம், செவ்வாய் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ் சங்கத்தினர் கொண்டாடியதிருவள்ளுவர் இராயிர ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெற்ற திருக்குறள் பேச்சுப் போட்டியில் ஒன்பது கல்லூரிகள்கலந்து கொண்டன.

போட்டியில்வெற்றிபெற்றவர்கள் வருமாறு.

முதலாவது: செல்வி த. வசந்தகுமாரி, (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) இரண்டாவது: செல்வன் க. சோதீஸ்வரன் (காரைநகர் இந்துக் கல்லூரி)மூன்றாவது: அ. சந்திரவதனா, (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

அறுவருக்கு ஆறுதல்பரிசுகள் கிடைத்தன.

......

## திறந்து வைத்தார்

சம்பூர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒழுங்கு செய்த பொருட்காட்சியைத் திருக்கோணமலை மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை திறந்து வைத்து சியவச சுவிப் விற்பனையையும் ஆரம்பித்துப் பேசுகையில் உலகின் வேறெந்த நாட்டிலும் வழங்கப்படாத இலவசக் கல்வி இலங்கையில் மட்டும் வழங்கப்படுகிறது. இது இன்றைய உலகமே ஏற்றுக் கொண்ட உண்மையாகும்.

எனவேகல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏற்படுத்தப் பட்ட இந்த தெய்வீகப்பணியான சியவச சுவிப் விற்பனைக்கு நாம் எல்லோரும் ஆதரவு நல்கவேண்டியது

# ஐயாறன் எழுதுவது

இன்று சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை என்பதை நேற்று தபாலில் கிடைத்த "இந்து இளைஞன்" சஞ்சிகை ஞாபகமூட்டியது. அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் மாத வெளியீடாகிய இச்சஞ்சிகையின் மேலட்டையிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவுருவம் சுந்தரமான வர்ண ஓவியமாக வெளியாகி மனதைக் கவர்ந்தது.

உள்ளே புரட்டினேன். "மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன் ... நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்ற தேவாரமும் அதற்கான கருத்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

சமயசம்பந்தமான பல நல்ல கட்டுரைகள் அடங்கிய இச்சஞ்சிகை சைவ வாலிபர்களிடையே சமய ஞானத்தை ஊட்டி, தெய்வ நம்பிக்கையை வளர்க்கும் நல்ல பணி செய்வது பாராட்டத்தக்கது. வாலிப உலகத்திலே நாத்திகம் பரவிவரும் இக்காலத்தில், சமய உண்மைகளை விளக்கி தெய்வ நம்பிக்கையால் ஏற்படும் நன்மைகளை தெளிவுபடுத்தி அவர்கள் மனம் கோணல் வழிகளில் செல்லாமல் தடுப்பது பெரியதோர் கைங்கரியமாகும்.

0 0 0

'பிறவி நீ கொள்ளாயோ' என்ற தலைப்புடனே சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றிய கவிதை, இப்பொழுது இந்துசமூகத்தில் எழுந்துள்ள சாதிச் சிக்கலைத் தீர்க்க சுந்தரர் காட்டிய வழியை எடுத்துக் கூறுவதாகவுள்ளது.

அப்பாடலை அப்படியே இங்கு தர என் மனம் தூண்டுகிறது. 'தமிழ்நாடு தந்த பெரும் தொண்டர்களைச் சேர்த்து, சந்தாடும் பவளத்தில் சரமாக அமைத்தே, அமிழ்தோடும் ஆரமென அரனார்க்குப் படைத்த, ஆரூரனெனும் பெயர ஆலாலசுந்தர 'இமிழ் தில்லை அந்தணரை எடுத்து முதல் இயம்பி, இணையாகக் குயவனைத்தான் ஏற்றினையே அடுத்து, தமிழ் சைவப் பெரியார்கள் கருத்தினை அறியார், கண்ணிழந்து சாதிதனைக் கோயிலுள்ளும் அமைத்தார்'' என்று சாட்டை கொடுக்கின்றார் இக்கவிதை எழுதிய இரத்தினமவர்கள்.

சாதிச் செருக்குக்கு சாவு மணி அடிப்பதே பெரிய புராணத்தின் நோக்கமென்றும், அதற்கு ஆதாரமாகத் திருத்தொண்டர் தொகையைப்பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் பெரிய சமூக சீர்திருத்தவாதியென்றும், தெய்வ பக்தி யாருக்கு உண்டோ அவர் எந்த சாதியினராயினும் அவருக்குத் தாம் அடிமை என்றும் அந்தணராகிய சுந்தரர் பாடியுள்ளதன் நோக்கம் சாதி வெறியை சைவ சமூகத்திலிருந்து நீக்குவதேயென்றும் கூறுவர். சுந்தரமூர்த்தி நாயனாரை சைவ சமய குரவர் என்று போற்றி, அவரது குருபூசையையும் கொண்டாடுபவர்கள், சாதி இறுமாப்புக் கொண்டு அதைவற்புறுத்த முடியுமா?

சுந்தரர் அவ்விதம் பாடி பல நூற்றாண்டுகளாகியும், இன்னும் சைவ சமூகத்தில் சாதி உயர்வு தாழ்வுகளும், கொடுமைகளும் நீடிக்கின்றனவே! சைவ சமூகம் ஒற்றுமைப்பட்டு முன்னேற முடியாமல் இருப்பதற்கு இதுவே காரணமல்லவா! இந்து வாலிபர்கள் இதை உணர்ந்து, கவிதை மூலம் இடித்துக்கூற முன்வந்துள்ளது, நல்லதோர் அறிகுறி. இன்று சமூகத்திலுள்ள கேடுகளையும் குறைகளையும் நீக்க வழிகாட்டுவதே திருத்தொண்டர் புராணத்தின் நோக்கமாகும். அதை சிறப்பாக சைவ வாலிபர் உணர்ந்து, பின்பற்ற முன் வந்தால்தான் சைவ சமூகம் மேம்பட்டு முன்னேறவும், மேன்மைகொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கவும் வழி பிறக்க முடியும்.

0 0 0

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப், போகமும் திருவும் புணர்ப்பானைப், பின்னை என் பிழையைப் பொறுப்பானைப், பிழையெலாம் தவிரப் பணிப்பானை, இன்ன தன்மையன் என்றறிவொண்ணா, எம்மானை எளி வந்த பிரானை, அன்னம் வைகும் வயற்பழனத்தணி, ஆரூரானைமறக்கலுமாமே.''

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தவிர இந்தியாவிலுள்ள இதர அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் ஆதரவும் ஒத்துழைப்பும் தெரிவித்திருக்கின்றன. குறிப்பாக இளைஞர்கள் இந்திராவின் துணிச்சலைப் பாராட்டியிருப்பதுடன் அவருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தெரிவித்திருக்கின்றனர் இந்தியா விடுதலையடைந்து இருபத்திரெண்டு ஆண்டுகளாகி விட்டன. இத்தனை வருடங்களுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குப் பல விதத்திலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஓரளவு பயனளித்து வருவது உண்மைதான். ஆனாலும் அங்கு மக்களின் பசியும் பஞ்சமும் நீங்கவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் குறையவில்லை, மக்களின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகள் நிறைவேறவில்லை. மக்கள் மத்தியில் அதிருப்தியும் விரக்தியும் வளர்ந்து எதற்கும் வன்முறையை நாடும் மனப்பான்மை வளர்ந்து வருகிறது. இதனால் தேசிய ஐக்கியத்துக்கும் ஒருமைப் பாட்டுக்குமே ஊறு விளைந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்படாமல் இல்லை. இதுவரை இந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வந்த பொருளாதாரக் கொள்கைகள் ஏழைகள் பரம ஏழைகளாகவும, பணம் படைத்தவர்கள் வர்த்தகம், தொழில் ஆகியவைகளில் சூதாட்டம் நடத்தி பணத்தைப் பதுக்கவும்தான் வாய்ப்பளித்து வந்திருக்கின்றது உதாரணமாக நெல் அறுவடைக் காலத்தில் பணக்காரர்கள், வங்கிகளில் சுலபமாகக்கடன்பெற்று விவசாயிகளிடமிருந்து குறைந்த விலையில் நெல்லை வாங்கிப் பதுக்கி வைத்து, அடுத்த சில மாதங்களில் நெல்லை அதிக விலைக்கு விற்றுப் பணத்தைக் குவித்துக் கொண்டிருந்தனர். அதாவது நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் குவிந்திருக்கவும் மற்றும் பெரும்பாலான மக்கள் வறுமையில் உழலவுமே இதுவரை இந்திய நாட்டின் பொருளாதார அமைப்புவழி வகுத்து வந்திருக்கிறது. வங்கிகள் இதற்கு உறுதுணையாக இருந்திருக்கின்றன. இது பொருளாதாரக் கொள்கைக்கும் 'நாணயம்' என்பதன் அர்த்தத்துக்கும் புறம்பானவை.

இந் நிலையில் இருபத்திரெண்டு வருடகால அனுபவத்தைக் கொண்டு பொருளாதாரக் கொள்கையில் மாறுதல் செய்வதற்கும், தேசஉடமை நடவடிக்கை மோசமாக்கிவிடப்போகிறது?

வங்கிகளைத் தேசஉடமையாக்குவது உட்பட 19 அம் சங்களைக்கொண்ட பொருளாதாரஅபிவிருத்தித் திட்டமொன்றை பிரதமர் இந்திரா சமீபத்தில் பங்களூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் கொண்டுவந்தார். வங்கிகளைத் தேசஉடமையாக்குவதை நிதி மந்திரி மொரார்ஜி தேசாயும் மற்றும் சிலரும் வன்மையாக எதிர்த்தனர். ஆனாலும் அதை கமிட்டி ஏற்றுக் கொண்டது. தனது திட்டத்தை எதிர்த்தவர் அதை மனப்பூர்வமாக அமுல் செய்வாரா என்ற ஐயத்தில் மொரார்ஜியிடமிருந்து நிதி மந்திரி பதவியை இந்திராதாமே ஏற்றுக்கொண்டார். இது இந்திராவுக்கெதிராக காங்கிரசுக்குள்ளும் வெளியே சிலர் மத்தியிலும் கடும் எதிர்ப்பைக் கிளப்பியது. பயமுறுத்தல், மிரட்டல், நெருக்குதல் ஆகிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் இவை இந்திராவிடம் பலிக்கவில்லை. நாட்டு மக்களையும் அவர்களின் மனோநிலையையும் சரியாக உணர்ந்துகொண்டு அசைய மறுத்துவிட்டார். மொரார்ஜி தன்து துணைப் பிரதமர் பதவியையும் துறந்தார். வேறுவழியில்லை.

காங்கிரஸ் ஆட்சி மன்றக் குழுவும் திருமதி இந்திரா காந்தியின் செயலையும் திட்டத்தையும் ஏற்றுக்கொண்டுவிட்டது இளைஞர்கள் பெரும் ஆதரவுதெரிவிக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கின்றன. நாட்டின் நலனை முன்னிட்டுக் கொண்டுவரப்பட்ட இத் திட்டம்; சரியான முறையில் சகலரின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெற்று செயற்படுவதில் தான் நாட்டின் முன்னேற்றமும் பொருளாதாரத்திட்டத்தின் வெற்றியும் பெரிதும் தங்கியிருக்கின்றன.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி 14 வங்கிகளையும் தேசஉடமையாக்கும் அவசரச் சட்டத்தை நிறுத்தி வைக்கக்கோரி நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மனுவொன்றை நீதிமன்றம் ஏற்று அதன்படி உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆயினும் இன்றுள்ள நிலையில் திருமதி இந்திரா புதிய மசோதா ஒன்றைக் கொண்டுவந்து அமோக ஆதரவுடன் நிறைவேற்றுவாரென்பதில் ஐயமில்லை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19[illegible]9ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி [illegible] வெளியிடப்பட்டது

...டாளென்றால் அதில் இந்த நம்பிக்கையின் குரல்தானே எதிரொலிக்கிறது. வாழும் இடம் குறுகிவிட்டதுஇந்தப்...

அந்தக் குழந்தையின்வாய் ஆச்சரியத்தால் திறக்க வாயில் சோற்றை ஊட்டி சந்திரன் பற்றிய உண்மைச்...

...பொன்னுலகத்தைப் பார்க்க வருவார்கள் பலர்.

—கணேஷ்

மட்டுநகரில் கல்வி நூற்றாண்டு விழா

# 200 பாடசாலைகள் கலந்துகொள்ளும் மிகப்பெரிய பொருட்காட்சி

## ஏற்பாடுகளை உபகுழுக்கள் கவனிக்கின்றன

மட்டக்களப்பு, செவ். கல்வி நூற்றாண்டுவிழாவையொட்டிஎதிர்வரும்ஆகஸ்ட் மாதம் 4-ம் 5-ம் 6-ம் 7-ம் திகதிகளில் மாபெரும் பொருட்காட்சி ஒன்று மட்டக்களப்பில் நடைபெறவிருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுமார் 200 பாடசாலைகள் கலந்துகொள்ளும் இப்பொருட்காட்சிக்கான ஏற்பாடுகள் மிக மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. இப்பொருட்காட்சி மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். விஞ்ஞானக் கண்காட்சி, கலை கைப்பணிப் பொருட்காட்சி, கலைநிகழ்ச்சிகள் ஆகிய மூன்று அங்கங்களும் முறையே மட்டக்களப்பு அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறும்.

விஞ்ஞானக் கண்காட்சியில் உயிரியல் விநோதங்கள், விஞ்ஞானப் புதுமைகள் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களின் மாதிரிகள் மட்டக்களப்பு வாவியின் உயிர்வளம், கமத்தொழிற்பகுதியில் புதுமுறை விவசாயம், மிருகவைத்தியத்துறைப் புதுமைகள், விண்வெளிப்பயணம் பற்றிய காட்சிகள் முதலியன இடம்பெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளை திருவாளர்கள் எஸ். ஏகாம்பரம், எஸ். மனோகரன், எஸ். பாக்கியராசா, எம். எம். அபூபக்கர் ஆகியோரைக்கொண்ட உப குழு கவனித்துவருகின்றது.

கலை கைப்பணிப் பொருட்காட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நூறு வருடக்கல்வி வளர்ச்சி, சிப்பி வேலைகள், சீலை வர்ணங்கள், அலங்கார ஓவியங்கள், தையல் றேந்தைப் பின்னல் வகைகள், பலவித சமையல் முறைகள் என்பன இடம் பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை திருவாளர்கள் ஆர். சதாசிவம், எஸ். பிரான்சிஸ், எஸ். இராஜதுரை ஆகியோரைக்கொண்ட உப குழு கவனித்துவருகின்றது.

கலைநிகழ்ச்சிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கியமான நாடகமன்றங்கள் அத்தனையும் பங்குபற்றுகின்றன. பொருட்காட்சி நடைபெறும் நான்குநாட்களிலும் மாலையில் வெவ்வேறு சுவைகளைப் பிரதிபலிக்கும் 12 வரலாற்று, சமூக, நகைச்சுவை நாடகங்களும் மற்றும் நடனம், காலட்சேபம், வில்லுப்பாட்டு முதலிய நிகழ்ச்சிகளும்இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை திருவாளர்கள் அன்டிமணி, ஏ ஜே. மங்களராஜ், எஸ். சேதுகாவலர் ஆகியோரைக் கொண்ட உபகுழு கவனித்து வருகின்றது.

# திருமலை செய்திகள்

—நமது திருமலை நிருபர்—

### புதிய பாடசாலை

மூதூர் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் சங்கத்தின் முயற்சியால் மூதூர் ஷாபி நகரில் ஒரு முஸ்லிம் பாடசாலை உருவாக்கப்பட்டது. இப் பாடசாலை மூதூர் முதல்வர் ஜனாப் எம். ஈ. ஏச் முகமதலி திருக்கோணமலை பிரதம கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம்பிள்ளை ஆகியோர் சென்று பார்வையிட்டனர். இப் பாடசாலையைக் கூடிய விரைவில் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

0 0

### புனருத்தாரண வேலைகள்

குச்சவெளி, மூதூர், கும்புறுபிட்டி ஆகிய பகுதிகளிலுள்ள அழிவுற்ற குளங்களை புனர்வேலை செய்ய விசேட பகுதி ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. கமத்தொழிற் சேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர் திரு. ஐ. சண்முகராஜா இத் திருத்த வேலைகளுக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து வருகின்றார்.

0 0

### புதிய நிர்வாகிகள்

உப்புவெளி பெரியதொடுவாய் பரிபாலனசபைக் கூட்டம் திரு கா. வடிவேல்தலைமையில் ஆலய முன்றலில் அங்குரார்ப்பணம செய்து வைக்கப்பட்டது. பின்வருவோர் ஆலய பரிபாலன சபையினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு கா. வடிவேல், உபதலைவர்: திரு ப. தம்பியையா, செயலாளர்: திரு. வே. செல்வரட்ணம் உப செயலாளர்: கே. செல்வராசா, தனாதிகாரி: மு. அதிர்ஷ்டம். பரிசோதனையாளர்கள்: இ. சண்முகராசா, பொ. பத்மநாதன், எஸ். பாலசுப்பிரமணியம், மணியகாரன்: சி. சின்னத்துரை, நிர்வகக் குழுவிற்குப் 11 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

0 0

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் மத்திய ஆளணி ஊழியர்களின் திருக்கோணமலைக் கிளையின் பொதுக்கூட்டம் சங்கப்பணிமனையில் தலைவர் திரு வி. ரமணதாசன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. ரமணதாசன் காரியதரிசி; கே தம்பிராஜா பொருளாளர்: ஜி. சற்குணநாதன்.

0 0

### பொதுக்கூட்டம்

அஞ்சல், தொலை தொடர்பு சேவையாளர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளையின் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ந் திகதி காலை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் இந்துக்கல்லூரி சம்பந்தர் மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வாமதேவன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

0 0

### தமிழ்த்தினப் போட்டி

நிலாவெளி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் வட்டாரப் பாடசாலைப் பிரதம பரிசோதகர் திரு. எல். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற உப வட்டாரங்களுக்கான தமிழ்த்தின விழாப் போட்டியில் நிலாவெளி மெதடிஸ்த மிஷன் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது.

### திருமலை வந்த ஜெட்

இலங்கை அரசாங்கத்தினால் பெறப்பட்ட ஜெட் விமானம் சென்ற 20ந் திகதி மத்தியானம் சீனன்வாடி விமானத்தளத்தில் வந்திறங்கியது. 91 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடியது இந்த ஜெட் விமானம்.

...உலகமே ஏற்றுக் கொண்ட உண்மையாகும்.

எனவேகல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏற்படுத்தப் பட்ட இந்த தெய்வீகப்பணியான சியவச சுவிப் விற்பனைக்கு நாம் எல்லோரும் ஆதரவு நல்கவேண்டியது அவசியமாகும் என்றார்.

மூதூர் வட்டாரக் கல்வி அதிபாரி ஜனாப். ஏ. என். எம். இப்ராகிம் உட்படப் பலர் பேசினர். பாடசாலை அதிபர் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கல்வி அதிகாரியிடம் சமர்ப்பித்தார்.

### அமைப்புக்கூட்டம்

ஊர்காவற்றுறை, செவ்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தீவுப் பகுதிக் கிளையின் அங்கமாக அல்லைப்பிட்டி மண்கும்பானில் கிளை அமைப்புக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. மண்கும்பானில் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி, செவ்.

தர்மபுரத்தில் தபால் விநியோகம் ஆரம்பிக்கப் பட்டதைப் பாராட்டு முகமாக தர்மபுரத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குக்கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தலைமை வகித்தார். பகுதிக் காரியாதிகாரி, தபால் அதிபர் உட்படப் பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதி மக்கள் தமது தபால்களைத் தபால் நிலையஞ் சென்றே பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடபதி தபால் நிலையங்களின் கண்காணிப்பாளர் திரு. தர்மலிங்கம், இப்பகுதித் தபால் விநியோகத்திற்கு மேலும் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகத் தெரிவித்தார்.

### டாக்ஸியினுள் பிரசவம்

திருக்கோணமலை வாசியான ஒரு கர்ப்பிணித்தாய் பிரசவ வேதனையால் ஆஸ்பத்திரி செல்வதற்கு டாக்ஸியில் சென்றார். ஆஸ்பத்திரியை அடைந்ததும் தன்னால் இறங்கிச் செல்லமுடியாத நிலையில் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கையில், தள்ளுவண்டி ஒன்றைக் கொண்டுவர ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகக் காலதாமதம் ஏற்பட்டதனால் ஆஸ்பத்திரி விறாந்தையில் டாக்ஸியினுள்ளேயே இருந்து குழந்தையைப் பிரசவித்துவிட்டாராம் இந்தத் தாய்.

...முதல் இயம்பி, இணையாக்க குயவனைத்தான் ஏற்றினையே அடுத்து, தமிழ் சைவப் பெரியார்கள் கருத்தினை அறியார், கண்ணிழந்து சாதிதனைக் கோயிலுள்ளும் அமைத்தார்'' என்று...

...வந்த பிரானை, அன்னம் வைகும் வயற்பழனத்தணி, ஆரூரானை மறக்கலுமாமே.''

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# தீவுப்பகுதி செய்திகள்

—நமது அல்லைப்பிட்டி நிருபர்—

### புதிய தலைவா

எழுவைதீவு கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு மேற்படி கிராமசபை மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி உதவிஆணையாளர் தலைமையில் நடைபெற்ற போது புதிய தலைவராக திரு. விஸ்வலிங்கம் சிவசம்பு ஏகமனதாகத் தெரிவு செய்யப்படடுள்ளார்.

### 'பொதுமக்கள் தேவை'

கிராமசபைத் தலைவருடன் அங்கத்தவர்கள் 'ஒத்துழைத்தால்தான் ஒரு கிராமத்தை முன்னேற்றமுடியும். பொதுமக்களின் தேவைகளை நாம் பூர்த்தி செய்யவேண்டும். வேலணைகிராமம் சகலதுறைகளிலும் பின்தங்கியநிலையில் உள்ளது. அத்தியாவசிய தேவைகளான போக்குவரத்து வசதி மின்சாரவசதி குடிநீர்வசதி, சுகாதார வசதி என்பனவற்றை வேலணை மக்களுக்கு வெகு விரைவில்செய்து கொடுக்க வேண்டும். இதற்கு அங்கத்தவர்கள் யாவரும் போட்டியின்றி ஒத்துழைக்கவேண்டும். என்னை கிராமசபைத் தலைவராகத் தெரிவுசெய்ததற்கு அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்

மேற்கண்டவாறு வேலணை கிராமசபைக்கு புதிய தலைவராகத்தெரிவு செய்யப்பட்ட கணபதிப்பிள்ளை சதாசிவம் அங்கத்தவர்கள் பொதுமக்கள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

### புதிய நிர்வாகசபை

வேலணை- மண்கும்பான் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திரு. எம். விநாயகமூர்த்தி, உபதலைவர்: எம். சிவலிங்கம், காரியதரிசி: ஏ. துரைராசா, உப காரியதரிசி: பா. சிவபாதசுந்தரம், தனாதிகாரி: தி. விவேகானந்தராசா.

### கோழித் திருட்டு

நாரந்தனை கிராமத்தில் கோழித்திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாம். இப்பகுதிகளிலுள்ள கோழிகளை இரவில் திருடர்கள் பிடித்துச் செல்வதாக நாரந்தனைப் பகுதிமக்கள் ஊர்காவற்றுறைப் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

### சமயநூல்கள் அன்பளிப்பு

வேலணையைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும் சமய சேவையாளருமாகிய திரு மு. சி. சிற்றம்பலம் பல சைவசமய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும்இந்தோனேஷிய இந்து இளைஞர் சகோதரத்துவ பேரவையினருக்கு அன்பளிப்பாக அனுப்பியுள்ளார். அங்குள்ள இந்து மக்களுக்கு சைவசமயவளர்ச்சிக்குரிய இன்னும் பல நூல்களை அனுப்பப் போவதாக திரு. சிற்றம்பலம் தெரிவித்தார்.

### திருப்பணி

வேலணை பன்னம்புலம் ஸ்ரீ முருகமூர்த்திகோவில் மூலஸ்தான திருப்பணி வேலைகள் பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்கான வேலைகளில் திருப்பணிச் சபையினர்ஈடுபட்டுள்ளனர்.

### கௌரவித்தனர்

சிதம்பரம் வைத்தீஸ்வரன் கோவில் சங்காபிஷேகவிழாவில் கலந்து கொண்டு தாயகம் திரும்பிய பிரம்மஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் வேலணைதெற்கு சிவசுப்பிரமணியர் ஆலயத்துக்கு விஜயம் செய்தபோது வேலணை தெற்கு நல உரிமைச்சங்கத் தலைவரும் மேற்படி கோயிலின் ஸ்தாபகருமாகிய ஐ. சண்முகம் மலர்மாலைசூட்டி கௌரவித்து வரவேற்றனர்.

### பிரயாணிகள அதிருப்தி

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு நோக்கிச் செல்லும் இ. போ. ச. பஸ்வண்டிகள் பிரயாணிகள் இறங்க வேண்டிய இடத்தில் நிற்காமல் பல தூரம் சென்றே நிற்கின்றனவாம். இதனால் மிகுதித்தூரத்திற்கு பிரயாணிகள் நடந்தேசெல்கின்றனர். இது சம்பந்தமாக பிரயாணிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

### ஏற்பாடு

மட்டுவில், செவ்வாய்

மட்டுவில் மகாவித்தியாலய அதிபர்திரு. நடராசாவின்சேவைநலனை பாராட்டிக் கௌரவிக்க மேற்படி மகாவித்தியாலய பழையமாணவர்கள் ஏற்பாடுசெய்து வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org